
ஜூன் 2007 JUNE | இதழ் 197 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION









கொண்டாட்டம்

வயது பதினாறு

மொன்றியல் 'முகவரி'

வர்த்தகச் சோலை

Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

17 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

## ஆசிரியரிடமிருந்து — From the Editor

ஒன்றாறியோவில் - முக்கியமாக, ரொறன்ரோ மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் எந்தளவுக்குப் பாதுகாப்பு வாய்ந்தவை? பாடசாலைச் சபைகள் அல்லது மாகாண அரசு இவைகளைக் கவனிக்கின்றதா? இந்த மாகாணத்திலுள்ள 'பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள்' எந்தளவுக்குக் கண்காணிப்பு நிறைந்தவை? இந்தக் கேள்விகள் அண்மைய காலங்களில் மிகப் பெரியளவில் ஒவ்வொருவரிடமிருந்தும் எழுந்துள்ளன. கனடிய மைய ஊடகங்களிலிருந்து, இனக்குழுமங்களின் பன்மொழி ஊடகங்கள் வரை இக்கேள்வியை முன்வைக்குமளவுக்கு நிலைமை மோசமாக மாறியுள்ளது. நெஞ்சைத் தொட்டுச் சொல்வதானால், மேற்சொன்ன கேள்விகள் அனைத்துக்குமுரிய உண்மையான பதில் 'இல்லை' என்பதாகவே இருக்க வேண்டும். பாடசாலைகளும், பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களும் ஒவ்வொரு குடும்பத்துடனும் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை. அதனால், இவ்விடயங்கள் பாரதூரமானவையாக நோக்கப்படுவது தவிர்க்க முடியாதது. கடந்த மாதப் பிற்பகுதியில், ரொறன்ரோ மேற்கிலுள்ள ஒரு பாடசாலைக்குள் வைத்து பதினைந்து வயது மாணவன் ஒருவன் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டான். இன்றைய நாட்களில் நடைபெறும் கொலைச் சம்பவங்களுடன் ஒப்பிடுகையில், ஒருவர்தானே கொல்லப்பட்டாரென்று சிலர் நியாயம் கூறலாம். 'எண்ணிக்கை' என்பதல்ல இங்கு முக்கியம். எந்த இடத்தில் இக்கொலை நடைபெற்றதென்பதும், அங்கு எந்தளவுக்குப் பாதுகாப்பு இல்லையென்பதுமே கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. இச் சம்பவம் தொடர்பாக, கொலையுண்ட மாணவனின் இரு நெருங்கிய சகாக்கள் - அதே பகுதியில் வசிப்பவர்கள், நகரக் காவலரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கொலையுண்ட மாணவனின் தாயினால்கூட இதனை நம்ப முடியவில்லை. மரணமான மாணவனின் தாயை நேரில் சந்தித்து, தங்கள் வேதனையையும் அனுதாபத்தையும் அவரிடம் தெரிவித்து, மரணச் சடங்கில் பங்குபற்றி, அதற்குப் பின்னர் இடம்பெற்ற அனுதாப நிகழ்வுகளிலும் முக்கிய பணியேற்ற இரு நண்பர்களே 'கொலையாளிகள்' என்று கைதாகுவார்களானால், இதனை எவராலும் நம்ப முடியாது. இவ்விடயம் தற்போது சட்டத்தின் முன்னால் இருப்பதால், இதற்குமேல் இதனை அலச முடியாது. ஸ்காபரோவில் ஒரு வீட்டின் மீது எரிகுண்டு வீசப்பட்டது. குடும்பத்தலைவி மோசமான எரிகாயங்களுக்குள்ளானார். மற்றையோர் சிறுகாயங்கள் அடைந்தனர். அந்த வீட்டைச் சேர்ந்த ஒரு மாணவருக்கும் அவர் கற்கும் பாடசாலையிலுள்ள வேறு மாணவர்களுக்குமிடையில் உருவான தகராறு எரிகுண்டு வீச்சுவரை சென்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக ஸ்காபரோவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சமூகப் பிரமுகர்களுடன் ஒரு கூட்டத்தை நடத்தினார். பாடசாலையில் ஏற்பட்ட பிரச்சனையை நிர்வாகம் சரியாகத் தீர்க்கத் தவறியதே நிலைமை மோசமடையக் காரணம் என்று பங்குபற்றினோர் சுட்டிக் காட்டினர். அதனை அந்த அரசியல்வாதி ஏற்றுக் கொள்ளவில்லை. எரிகுண்டு வீச்சு பாடசாலை வளவுக்குள் இடம்பெறாததால், அதற்கும் பாடசாலைக்கும் எந்தச் சம்பந்தமில்லை என்பது அவரது வாதமாக இருந்தது. இப்படியான தர்க்கவாதமுள்ளவர்கள் எதற்காக ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும். ஒன்ராறியோவிலுள்ள 'பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள்' தொடர்பான அதிர்ச்சி தரும் தகவல்களை ரொறன்ரோவின் முன்னணி ஆங்கிலப் பத்திரிகையொன்று வெளிக்கொணர்ந்துள்ளது. செய்தியாளர் குழுவொன்று புலனாய்வு செய்து பெற்ற விபரங்கள் இவை. ஒவ்வாமையுள்ள உணவுகள் பரிமாறப்படுகின்றன. பிள்ளைகள் கவனிப்பாரற்று விடப்படுகின்றனர். எலிகளின் ராஜ்யம் நடக்கும் குசினிகளுக்குள், நோய்கள் பரவும் அபாயமான அசுத்தச் சூழலில் உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. தண்டனை வழங்குதல் என்ற பெயரில் உடையணிகள் வைக்கப்படும் 'குளோசற்', மற்றும் பொருட்கள் குவித்து வைக்கப்படும் 'ஸ்டோரேஜ்' போன்றவற்றுள் பிள்ளைகள் தள்ளப்படுகின்றனர். இவ்வாறான நம்பமுடியாத விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, மூன்றாண்டுகளாக ஆவணங்களில் பதியப்பட்டிருக்கின்ற போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று புலனாய்வுச் செய்தியாளர் குழு எடுத்துக் கூறியுள்ளது. தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பான இடங்களில் ஒப்படைத்துள்ளோம் என்று நம்பிக்கையுடன் தத்தமது வேலைக்குச் செல்லும் பெற்றோர் பெருங்கவலையும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். "உலகின் சிறந்த நகரங்களுக்குள் ரொறன்ரோ முன்னணியிலுள்ளது" என்று அறிக்கைகள் சொல்லுகின்றன. ஆனால் இங்கு உள்ளே பார்த்தால், "ஒய்யாரக் கொண்டைக்குள் ஈரும் பேனும்" பாடல்தான்!

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல்
## 10வது ஆண்டாக நடத்தும்
## கனடிய தின விழா

### ஜூன் 29 வெள்ளிக்கிழமை

பதினேழாவது ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' பத்தாவது ஆண்டாக நடத்தும் 'கனடிய தின விழா' இந்த மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரையும், கனடா கந்தசாமி கோவில் (733 பேர்ச்மவுண்ட் வீதி, ஸ்காபரோ) அலங்கார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வழமைபோன்று சிறுவர், சிறுமியர், இளையோர், முதியோர் வழங்கும் பல்வகை நடன நாட்டிய நாடக கலை நிகழ்ச்சிகள் விழாவில் மேடையேறும்.

பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்பட்ட கனடிய தின விவேகப் போட்டிக்கான பரிசளிப்பு, சிறப்பு அம்சமாக இங்கு இடம்பெறும்.

கனடியத் தமிழர்கள் தங்களுக்குப் புகலிடம் தந்த நாட்டின் பிறந்த நாள் வைபவத்தில் தங்களையும் இணைத்துக்கொளவதில் பெருமையடை-வதை தேசிய மட்டத்தில் எடுத்துக் காட்டும் வகையிலும், அதேசமயம் தமிழர் கலை, பண்பாடு, வாழ்வியல் ஆகியவைகளைப் புலப்படுத்தும் நோக்கிலும் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளது.

பிரவேசக் கட்டணம் எதுவும் செலுத்தாது இலவசமாக இந்த விழாவில் பொதுமக்கள் பங்கேற்க முடியுமென்பதால் அனைவரும் மகிழ்வுடன் அழைக்கப்படுகின்றனர்.

விழா குறிப்பிட்ட நேரத்துக்கு ஆரம்பமாகும்.

மேலதிக விபரங்களை 416 920 9250 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும்.

'தமிழர் தகவல்' நடத்தும் கனடிய தினவிழா கடந்த ஒன்பது ஆண்டுகளாகச் சுழற்சி முறையில் ரொறன்ரோ றோஸ் அவினியு சமூக அரங்கு, ஸ்காபரோ சிவிக் சென்டர் உள்வட்ட அரங்கு, ரொறன்ரோ வெலஸ்லி சமூக அரங்கு ஆகியவற்றில் நிகழ்ந்தேறியது குறிப்பிடத்தக்கது. .

# தொழிற்றுறை அனுபவ குடிவரவாளருக்கு ஒன்ராறியோவில் துரித வேலைவாய்ப்பு
# Ontario Provincial Nominee Program

குடிவாளர்களாக ஒன்ராறியோவில் குடியேறும் அல்லது குடியேற விரும்பும் வெளிநாட்டுக்காரர்கள், அவரவர் பயிற்சி பெற்ற அல்லது துறைதோய்ந்த வேலையைத் துரிதமாகவும் இலகுவாகவும் பெறுவதற்கான புதிய திட்டமொன்றினை ஒன்ராறியோ மாகாண அரசு அவசரமவச-ரமாக அறிவித்துள்ளது.

ஒன்ராறியோவின் தொழிற் சந்தைக்குத் தேவையான தொழில்நுட்பவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மெக்கானிக்குகள், தொழிற்சாலை வேலையாட்கள் போன்ற பணிகளுக்குத் தேவையான பயிற்சி பெற்றவர்களை முதன்முறையாக ஒன்ராறியோ மாகாண அரசு தெரிவு செய்வதற்கு இந்தத் திட்டம் வழிவகுக்கின்றது என்று மாகாண குடிவரவு அமைச்சர் மைக் கோல் அறிவித்துள்ளார்.

மாகாண தெரிவுத் திட்டம் (Provincial Nominee Programs - PNP) என்று பெயரிடப்பட்டுள்ள இத்திட்டம் பற்றி மாகாண அரசு பின்வரும் விளக்கத்தை அளித்துள்ளது:

Provincial Nominee Programs, which are in place across the country, allow provinces to nominate individuals for immigration based on labour needs and provincial prioties. This pilot program enables Ontario employers and multinational corporations investing in Ontrio to recruit and retain internatioally retained individuals, including international students enrolled in Ontario. The employer category helps employers fill labour needs in specific fields. The investor category helps companies bring in key employees who will contribute to the long-term success of the investment.

The majority of the Ontario's nominees from the employer category for highly skilled workers such as individual electricians, specialized professionals such as researchers and international students. Approximately half of the nominations will be targeted to communities outside the Greater Toronto Area, to support growth in regional economics.

ஒன்ராறியோவில் கல்வி கற்க விசா பெற்று வரும் மாணவ சமூகத்தை இந்தத் திட்டம் பெரிதும் கவரும் தன்மையுள்ளது. ரொறன்ரோ பெரும்பாகத்துக்கு வெளியேயுள்ள தொழிலதிபர்களும், பல லட்ச டாலர் முதலீட்டுடன் தொழில் செய்பவர்களும் தாம் விரும்பும் பணியாளர்களைத் தெரிவு செய்ய இத்திட்டம் வழிவகுக்கும்.

தெரிவு முறையில் சித்தி பெறும் குடிவரவாளர்கள் ஒன்ராறியோ மாகாணத்தில் பணிபுரிய அனுமதி வழங்கப்படும்.

அவர்கள் தமது குடும்பத்தினருடன் கனடாவுக்கு வருவதற்கு விசாவுக்கு மாகாணச அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யும்.

முதல் வருடத்தில் பரீட்சார்த்த திட்டமாக ஐநூறு பேரை ஒன்ராறியோ அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யுமென அமைச்சர் கோல் மேலும் தெரிவித்துள்ளார். கனடிய மத்திய அரசாங்கமும் ஒன்ராறியோ மாகாண அரசாங்கமும் செய்துள்ள குடிவரவு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசு மேலதிகமாக 920 மில்லியன் டாலர்களை குடியமர்வு மற்றும் மொழிப் பயிற்சி வேலைகளுக்காக இவ்வருடத்துக்கென மாகாண அரசுக்கு வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான மேலதிக விபரங்களை, http://www. ontarioimmigration.ca/english.pnp.asp என்ற இணையத்தள முகவரியில் பெறலாம். அல்லது 1 866 214 6820 இலக்கத்தை அழைக்கவும்.

அடுத்த நான்கு மாதத்தில் நடைபெறவிருக்கும் மாகாணத் தேர்தலை மையப்படுத்தி இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



எஸ்.தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## கனடிய தின வைபவத்தை முன்னிட்டு தமிழர் தகவல் பத்தாவது ஆண்டாக நடத்தும் பாடசாலை மாணவர் விவேகப் போட்டி

**முதலாம் பரிசு: Sabesan's Choice சபேசன் வழங்கும் தங்கப் பதக்கம்**
அனைத்துக்கும் சரியான விடையளிக்கும் அனைவருக்கும் பரிசுகள் உண்டு

**விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி நாள்: 2007 ஜுன் 15**

ஜுலை மாதம் முதலாம் திகதி வரும் கனடா தினத்தை முன்னட்டு 'தமிழர் தகவல்' வருடாந்தம் நடத்தும் மாணவர் விவேகப் போட்டியில் கனடாவின் எந்தப் பாகத்திலுமுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் பங்கு பற்றலாம். விடைகள் மாணவரால் தமிழில் மட்டும் எழுதப்பட வேண்டும். விடையுடன் சேர்த்து மாணவரின் முழுப்பெயர், வயது, கல்வி கற்கும் பாடசாலையின் பெயர், வகுப்பு, வீட்டு முகவரி, வீட்டுத் தொலைபேசி இலக்கம் ஆகியவைகளையும் தவறாது எழுத வேண்டும். போட்டி தொடர்பான கடித/தொலைபேசித் தொடர்புகள் எதுவும் ஏற்கப்படாது.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

**Canada Day Quiz Contest - 2007**
**P.O.Box - 3, Station - F, Toronto, Ontario. M4Y 2L4.**

### போட்டிக்கான கேள்விகள்

1. கனடியப் பிரஜாவுரிமை உருவாகி இப்போது எத்தனை வருடங்கள்? அதற்கு முன்னர் கனடிய மக்கள் எந்த நாட்டுப் பிரஜாவுரிமை உடையவர்களாகக் கருதப்பட்டனர்?
2. ஒன்ராறியோ மாகாண சபைக்கான அடுத்த தேர்தல் எப்போது நடை பெறவுள்ளது?
3. தமிழர் தகவல் ஈரெண் அகவை மலரில் எத்தனை இளையோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.?
4. 1954 நவம்பர் 26ம் திகதி தமிழருக்கு முக்கியமான நாளாக அமைவது எதனால்?
5. 2007ன் உலகச் செல்வந்தர் வரிசையில், கனடிய தொலைக்காட்சி நிறுவனமொன்றின் தலைவரும் உள்ளார். அவரது பெயர் என்ன? அல்லது, அந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தின் பெயர் என்ன?
6. கியுபெக் மாகாண முதலமைச்சரின் பெயர் என்ன? எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?
7. ஐரோப்பிய ஒன்றியத்தில் (Europeon Union) அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
8. கனடிய கவர்னர் ஜெனரல் Michaelle Jean எந்த நாட்டில் பிறந்தவர்?
9. கனடாவிலுள்ள தொழிற்றுறையாளர்களில் பொதுமக்களின் அதிகூடிய நம்பிக்கையைப் பெற்றுள்ள தொழிற்றுறையாளர்கள் யார்?
10. கனடியத் தமிழர்களின் ஒருமித்த குரலாகச் செயற்படும் அமைப்பின் பெயர் என்ன?

## தேநீர் புற்றுநோயை தவிர்க்குமாம்!

இரவில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோப்பை தேநீர் அருந்துவதன் மூலம் Sqamous cell, அல்லது Basal cell carcinoma எனும் அதிகளவில் காணப்படும் இருவகை தோல் புற்றுநோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்கலாம் என ஒரு புதிய ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

## பல் துலக்காவிடின் புற்றுநோய் அபாயம்

பல் துலக்காவிட்டால், முரசு வியாதியினால் முழுப் பற்களையும் இழக்கும் அபாயம் நேரிடும் எனும் தூண்டல் போதாதா? ஆய்வாளர்கள் இன்னுமொரு புதிய காரணத்தையும் கண்டுபிடித்துள்ளனர் - நாவில் ஏற்படும் புற்றுநோய். Buffalo பல்கலைக்கழகத்தினாலும், ரொஸ்வெல் பார்க் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தினராலும் நீண்டகால periodontitis அல்லது நீண்டகால முரசு வியாதிக்கும் நாவில் புற்றுநோய் வருவதற்கும் தொடர்பிருப்பதாக கூறப்படுகின்றது.

## நீரிழிவு வியாதிக்கான 'அவன்டா' மருந்து ஆபத்தானது!

புதிய ஆய்வொன்று அதிகளவில் மருந்துச் சீட்டெழுதிக் கொடுக்கப்படும் நீரிழிவு நோய்க்கான அவன்டா (Avanda) எனும் மருந்து இருதய நோய்/மாரடைப்பு அல்லது மரணத்தைக் கூட ஏற்படுத்தும் பெரும் அபாயம் நிறைந்ததாக காணப்படுகிறது என தொடர்புபடுத்துகிறது. உலகளவில், கனடா நோயாளர்கள் உட்பட ஆறு மில்லியனுக்கும் அதிகமானவர்கள், 8 வருடங்களுக்கு முன் சந்தைப்படுத்தப்பட்ட GlaxoSmithKline மருந்தை பாவித்துள்ளார்கள். பல ஆய்வுகளின் கூட்டு முடிவு 45 வீதமானவர்களுக்கு இருதய நோய் (Heart attack) வருவதற்கான பெரிய அபாயம் இருப்பதாக தெரிவித்திருப்பதை, New England Journal of Medicine எனும் மருத்துவ சஞ்சிகை வெளியிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் வாழ்வு
# சொரியல் நிலத்தை நம்பி என்னத்தைச் செய்வது?

அக்டோபர் பத்தாம் திகதி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தலில் ஏதாவதொரு கட்சி ஒரு தமிழரையாவது அபேட்சகராக நிறுத்துமா? இல்லையென்றால் ஏன்? பதிலையும் தமிழரே கண்டுபிடிக்க வேண்டும்!

மேலுள்ள பந்தி, கடந்த மாதம் இப்பகுதியில் இடம்பெற்ற கட்டுரையின் கடைசிப் பகுதியாக இடம்பெற்றிருந்தது.

இதே கேள்வி, கனடிய மத்திய அரசுக்கான தேர்தலுக்கும் பொருத்தமானது என்பது உக்கிரனின் கருத்து.

கடநத பதினைந்து வருடங்களுக்குள், ஆரம்பத்தில் மத்திய மற்றும் ஒன்ராறியோ மாகாண அரசுத் தேர்தல்களில் தமிழர்களை அபேட்சகர்களாக நியமித்தது (தோமஸ் டேவிட், ஜானகி பாலகிருஷ்ணன், சந்திரன் மயில்வாகனம்) என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது கன்சர்வேடிவ் கட்சி ஸ்காபரோ மேற்குத் தொகுதியில், வீரசுந்தரம் என்னும் தமிழரை அபேட்சகராக நியமித்தது.

இத்தொகுதியில் நீண்ட காலத்துக்கு எம். பீயாகவிருந்த ரொம் வப்பெல் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். புதிய அபேட்சகர் தெரிவு விரைவில் நடைபெறவுள்ளது. தமிழர் ஒருவர் அபேட்சகர் போட்டியில் குதித்து, சுமார் 700 பேரை புதிய உறுப்பினர்களாகவும் சேர்த்திருந்தார். வெற்றி வாய்ப்பு இவருக்கே கூடுதலாகவிருந்தது.

ஆனால் இங்கு ஒரு பெண்மணியை அபேட்சகராக நியமிக்க கட்சித் தலைவர் டியோன் முடிவெடுத்ததால், தமிழருக்கான சந்தர்ப்பம் கைநழுவிப் போனது. இது தொடர்பான பல சந்தேகங்கள் தமிழர் மத்தியில் எழுந்துள்ளது. வாதப் பிரதிவாதங்களும் தொடருகின்றன.

சகல தொகுதிகளிலும் பெரும்பாலான தமிழர்களின் ஆதரவைப் பெற்றுள்ள லிபரல் கட்சி மத்திய அரசுத் தேர்தலிலும் சரி, மாகாணத் தேர்தலிலும் சரி ஒரு தமிழரைக்கூட இதுவரை அபேட்சகராக நிறுத்தவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தங்களின் 'இந்தப்' போக்கை தமிழர் அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகவோ என்னவோ, அவர்களின் விழாக்களில் கலந்து கொள்வது, 'மினுங்கல்' சால்வைகளை போர்ப்பது, கட்டி அணைத்து கலரில் படம் எடுப்பது போன்ற 'மகுடி' விளையாட்டுகள் தடல்புடலாக தொடருகின்றது.

அதேசமயம், ஒருசில லிபரல் எம். பீக்கள் தாயகத்தில் தமிழர்கள் சிங்கள அரசினால் பாதிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி உரையாற்றியுள்ளனர்; தங்கள் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர். ஆனால் கூடுதலாகத் தமிழர்களுடன் உறவாடும் (?) லிபரல் எம். பி நாடாளுமன்றத்தில் தமிழர் விவகாரம் பற்றிப் பேச ஏனோ பின்னடித்து வருகின்றார்.

மத்திய அரசில், ஜாக் லேட்டனின் என். டி. பி நான்காவது இடத்தில், ஒரு சிறுபான்மைக் கட்சியாக இருக்கின்ற போதிலும், ஒப்பீட்டளவில் அதிகளவுக்கு தமிழர் விவகாரத்தை முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது,. கட்சியின் முன்னாள் தலைவரும், தற்போது வெளிவிவகார பேச்சாளராக இருப்பவருமான அலெக்ஸ் மக்டொனா இலங்கைப் பிரச்சனை தொடர்பாக விடுத்த ஆழமான அறிக்கையும், மற்றிரு எம். பீக்கள் நாடாளுமன்றில் ஆற்றிய உரைகளும் தென்பளிப்பவையாக அமைந்தன.

மேற்சொன்ன விடயங்களின் பின்னணியில் ஒரு தமிழர் அமைப்பு தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. கட்சி பேதங்களின்றி சகல அரசியலாளர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி இயங்கும் கனடியத் தமிழர் பேரவை, (Canadian Tamil Congress) இன்றைய காலகட்டத்தில் எமக்கு அச்சாணி போன்றது. அதில் உறுப்பினராகி, அதனை வளர்த்தெடுப்பது கனடியத் தமிழர் ஒவ்வொருவரதும் கடமை.

கனடியத் தமிழர் பேரவைக்கு அரசியல் சாயம் பூசுவதற்கான நடவடிக்கையிலும் சிலர் மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றனர். பேரவையின் இலச்சனையை திருட்டுத்தனமாகப் பயன்படுத்தி ஒரு பிரசுரம் அண்மையில் வெளிவந்தது.

வேறு சிலர், பேரவையின் பெயரைப் பயன்படுத்தி தங்கள் அரசியல் ஆசையை நிறைவேற்ற விரும்புகின்றனர். அக்டோபர் மாத மாகாண சபைத் தேர்தலில் வெவ்வேறு கட்சிகளிடம் தொகுதி கேட்டு நிற்கும் தமிழன்பர்கள் சிலர், "எங்களுக்குக் கனடிய தமிழ்ர பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது" என்றவாறு கூறி வருகின்றனர். இது தவறான தகவல்

குறிப்பிட்ட எவரையாவது தனித்து ஆதரிக்கும் நிலைப்பாட்டை கனடியத் தமிழர் பேரவை ஒருபோதும் எடுத்திருக்கவில்லை. கடந்த வருட மாநகராட்சித் தேர்தலில் 'தமிழர்களுக்குத் தமிழர்கள் வாக்களித்து தமிழர் பலத்தை நிரூபிக்க வேண்டும்" என்ற வேண்டுகோள் பேரவையால் முன்வைக்கப்பட்டது.

எனவே, தாம் விரும்பும் கட்சியில், அபேட்சகராகவோ அல்லது தொகுதி வேட்பாளராகவோ தங்கள் விருப்பத்தின் பேரில் போட்டியிட முன்வருபவர்கள், அதற்கான அங்கீகாரத்தை (endorsement) கனடியத் தமிழர் பேரவை கண்களை மூடிக்கொண்டு வழங்குமென எதிர்பார்ப்பது நன்றன்று.

"சொரியல் நிலம் வீடு கட்ட உதவாது" என்றொரு பழமொழியுண்டு. கனடியத் தமிழரின் 'பெயரில்' அரசியலுக்குள் பாதம் பதிப்பவர்கள் இதனை நினைவில் இருத்த வேண்டும்.

அபேட்சகர் தெரிவுக்குப் போட்டியிடுவதாக மட்டுமே இல்லாமல், தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆரம்பமே பலவீனமாக அமையின், அது இனத்தையே ஆட்டம் காணச் செய்து, பலமிழக்கப் பண்ணிவிடும்.

நிதானமும் அவதானமும் அரசியல் பிரவேசத்துக்கு அவசியம்!

உக்கிரன் பார்வை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் தொடர்

பகுதி
15

# காதில் விழுந்தவை

179. *நிலவில் குடியேறலாம்* (2007-02-20). வெயிலில் குடியேற முடியாது போலும்! குறிப்பு: 177

180. *சௌதி அரேபியாவில் நான்கு இலங்கையர்களின் தலைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன* (2007-02-20). Display, exhibit இரண்டும் பெயராயும் வினையாயும் அமைய வல்லவை. அவை வினையாய் அமையும் பொழுது காட்டு அல்லது காண்பி அல்லது காட்சிக்கு வை... என்று பொருள்படுவதுண்டு. இவை இணக்கமான பொருளில் எடுத்தாளப்படுபவை. எடுத்துக்காட்டு: பொருட்காட்சி. சௌதி அரேபியாவில் நடைபெற்றது ஒரு பொருட்காட்சி அல்ல. விக்டர் கொறியா, இறஞ்சித் சில்வா, சனத் புஷ்பகுமாரா, சஷீத் குமாரா ஆகிய நால்வரின் தலைகளும் துண்டிக்கப்பட்டு, தொங்கவிடப்பட்டன. (1) அவை *காட்சிப்படுத்தப் பட்டுள்ளன* என்பது அறவே பொருந்தாது. (2) *காட்டப்பட்டன* அல்லது *காண்பிக்கப்பட்டன* என்பதை விட, *காட்சிப்படுத்தப்பட்டுள்ளன* என்பதில் உள்ள சிறப்பும் புரியவில்லை. '*...மேற்படி நால்வர் மீதும் கொள்ளை மற்றும் துவக்கு வைத்திருந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அவர்களுக்குச் சட்டவாளர்களின் உதவி அளிக்கப்படவில்லை. (அறபு மொழியில் நடைபெற்ற) விசாரணை அவர்களுக்குப் புரியவில்லை. அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது மக்கள் நிரம்பிய ஒரு சந்தைச் சதுக்கத்தில் வைத்து அவர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டு தொங்கவிடப்பட்டன....* (al-Riyadth, Riyadth, 2007-02-21). இந்தச் செய்தியைத் தென்னிலங்கை ஊடகங்கள் பட்டும் படாமலும் நான்கு இலங்கையர்கள் என்று குறிப்பிட்டுள்ளன. அதே ஊடகங்கள் வெளிநாடுகளில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும் வட-கீழ் இலங்கையர்களை *தமிழர்கள்* என்றோ *முஸ்லீம்கள்* என்றோ இனங்காட்டத் தவறுவதில்லை.

181. *ஐ.நா.பாதுகாப்புக் கழகம்* (2007-02-21). UN Security Council. இதன் செவ்விய தமிழாக்கம்: ஐ.நா.பாதுகாப்பு மன்றம். பல்லாண்டுகளாக ஈழநாட்டுத் தமிழாக்கத் துறைஞர்கள் மன்றம், council இரண்டையும் நேரொத்த சொற்களாய் எடுத்தாண்டு வந்துள்ளார்கள். *கழகம்* என்பது *அவை, கல்விக்கூடம், படைப் பயிற்சிக் களம், சூதாட்டக் களம்...* என்றெல்லாம் பொருள்பட வல்லது (தமிழ் அகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், 1924-1982). குறிப்பு 43.

182. *சிவில் வாகனம்* (2007-02-21). Civilian vehicle. *குடிசார் வாகனம்* என்பது இதன் முறைசார் மொழிபெயர்ப்பு. முறைசாரா வகையில் இதனைக் குடியினர்க்குரிய வாகனம் அல்லது பொதுமக்களுக்குரிய வாகனம் எனலாம். *படைசார் வாகனம்* (படையினர்க்குரிய வாகனம்) military vehicle ஆகும். Colonel Mylvaganam got into a civilian vehicle என்னும் வசனத்தை, *ஏனாதி மயில்வாகனம் ஒரு சிவில் வாகனத்தில் ஏறினார்* என்று பெயர்ப்பது வேடிக்கை. அவர் குடியினர்க்குரிய வாகனம் ஒன்றில் ஏறினார் என்பதே வாடிக்கை.

183. *தென்மராட்சியை நோக்கி யுத்த தளபாடங்கள் நகர்த்தப்படுகின்றன* (2007-02-21). Military hardware என்பது இங்கு யுத்த தளபாடங்கள் எனப்பட்டுள்ளது. தளபாடம் (என்னும் கூட்டுப்பெயர்) furniture என்பதற்கே நிகரானது. Military hardware என்பது வெறும் தளபாடம் அல்ல. அண்மைக் காலம்வரை இது *கனரக ஆயுதங்கள்* எனப்பட்டது. *யுத்த தளபாடம்* என்பதைவிடக் *கனரக ஆயுதங்கள்* பரவாயில்லை. துப்பாக்கி முதல் பீரங்கி ஈறாகக் குண்டுவீச்சு வான்கலம் வரை அனைத்துமே படைக்கலங்கள் (military hardware) ஆகும். குறிப்பு: 13.

184. *யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா படையினர் வீட்டு வளாகங்களில் உள்ள மரங்களைவெட்டி வீழ்த்தி வருகின்றனர்* (2007-02-21). வீடு வளவுகளில். குறிப்பு: 70.

185. காவிரி நீர் *தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது* (2007-02-22). காவிரி நீர் தொடர்பாக அல்லது பற்றி அல்லது குறித்து கலந்துரையாடுவதற்கு...

186. *நீங்கள் மருந்துகளைப் பாவிக்கும் விதம் தெளிவாக விளக்கமளிக்கப்படும்* (2007-02-23). நீங்கள் மருந்துகளைப் பாவிக்கும் விதம் தெளிவாக விளக்கப்படும். அல்லது நீங்கள் மருந்துகளைப் பாவிக்கும் விதம் தொடர்பாக அல்லது பற்றி அல்லது குறித்து தெளிவாக விளக்கமளிக்கப்படும்.

187. *நீங்கள் இதுவரை கேட்ட செய்திகளின் முக்கிய சாராம்சம்* (2007-02-23). (1) இங்கு *சாராம்சம்* என்பதன் பொருள் *முக்கிய* அம்சம் என்பதே. ஆகவே *முக்கிய சாராம்சம்* என்பது ஒருவகையில் கூறியது கூறலாகும். (2) *நீங்கள் இதுவரை கேட்ட* முக்கியமற்ற அம்சங்கள் இறுதியில் தவிர்க்கப்படுகின்றன என்பது இங்கு தொக்கி நிற்கிறது. எனினும் தொடக்கத்தில் வாசிக்கப்பட்ட அதே செய்தித் தலைப்புகளே ஈற்றில் *முக்கிய சாராம்சம்* என் மாறுவேடம் பூணுகின்றன! உண்மையில் இவை மீண்டும் செய்தித் தலைப்புகள் ஆகும். (3) உலகின் தலைசிறந்த ஊடகம் எனப்படும் பி.பி.சி. உலக சேவை (ஆங்கிலம்) 4 விடயங்களை மாத்திரமே அதன் செய்தித் தலைப்புகளாக முன்வைக்கிறது. சில தமிழ் ஒலியூடகங்களோ ஏறக்குறைய 14 செய்தித் தலைப்புகளை முன்வைப்பதுண்டு!

188. *ஏதோ ஒரு புள்ளியில் அனைத்து மீறல்களும் நிறுத்தப்பட வேண்டும்* (2007-02-24). At some point. இது ஏதோ ஒரு *புள்ளியைக் குறிக்கவில்லை. ஏதோ ஒரு கட்டத்தில்....*

189. *ஈராக்கில் மதவெறித் தாக்குதல்கள் தொடர்கின்றன* (2007-02-25). ஈராக்கில் சியா பிரிவு இஸ்லாமியரும், சுனி பிரிவு இஸ்லாமியரும் மோதுண்டு வருகிறார்கள். இரு பிரிவினரும் இஸ்லாமியரே. எனவே அவர்களுடைய தாக்குதல்கள் *மதவெறித் தாக்குதல்கள்* ஆகா. மாறாக, அவை சாகைவாதத் தாக்குதல்கள் (sectarian attacks) ஆகும். *சாகையாயிர முடையார்...* (சாகை ஆயிரம் உடையார்...) என்பது தேவாரம். சாகை - sect (ஈழநாட்டுச் சொல்தொகுதி) சாகைவாத வன்முறை = sectarian violence. சாகை, sect இரண்டுக்கும் இடையே பொதிந்துள்ள பொருளொற்றுமையும், ஒலியொற்றுமையும் வியக்கத்தக்கவை.

190. *வணிக வளாகம், வர்த்தக வளாகம்* (2007-02-25). Shopping Mall. ஈழநாட்டில் campus மட்டுமே *வளாகம்* எனப்படுகிறது (குறிப்பு: 70). தமிழ் நாட்டில் அந்த வரையறை கிடையாது. வட அமெரிக்கா வாழ் தமிழ் பேசும் மக்கள் இதனைப் பேரங்காடி என்று குறிப்பிடுவதுண்டு.

191. *தமிழ் பேசும் மக்களின் சட்டரீதியான அபிலாஷைகள்* (2007-02-26). Legitimate aspirations of the Tamil-speaking people. தமிழ் பேசும் மக்களின் சட்டமுறைப்படியான வேணவாக்கள் (அல்லது வேட்கைகள்).

அடுத்த இதழிலும் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகள் என்றால் என்ன?
# What is meant by west Indies?




ஒன்பதாவது உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் மேற்கு இந்திய தீவுகளில் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டது. உலக கிண்ணத்தை பெறுவதற்கான இறுதியாட்டம் வரை ஸ்ரீலங்கா அணி விளையாடியதால் இப்போட்டி எம்மவர் வீடுகளில் சகஜமாக உபயோகிக்கும் ஒரு வார்த்தையாக (Household word) மாறிவிட்டது. அது மாத்திரமன்றி இப்போட்டி நடைபெற்ற நாடாகிய மேற்கிந்தியத் தீவுகள் என்ற சொற்பதம் எல்லோர் வாயிலும் சாதாரணமாக உச்சரிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக எம்மவரில் பலர் போட்டிகளைப் பார்ப்பதற்காக நேரடியாகவே மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று வந்தனர். ஆயினும் பலருக்கும் இத் தீவுகள் உலகின் எப்பகுதியில் உள்ளன, இதன் தலைநகரம் எது, இது ஒரு தனிநாடா, யார் ஆட்சியில் உள்ளது என்பது போன்ற சாதாரண விடயங்கள் கூட தெரியாது.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் கியூபாவுக்கு அண்மையில் உள்ள பிராந்தியம். கரீபியன் பிராந்தியம் என அழைக்கப்படும். இப்பிரதேசத்தை அண்டிய சமுத்திரம் கரீபியன் கடல் (Caribbean Sea) எனப்படும். இதில் சிறியதும் பெரியதுமாக 7,000 தீவுகள் வரை அடங்கும். இவற்றில் சில சுதந்திரம் பெற்றவை. சில பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் போன.ற நாடுகளுக்குச் சொந்தமானவை. இத் தீவுக் கூட்டங்களில் பெரும்பாலானவற்றில் மக்கள் வசிப்பதில்லை. இங்குள்ள பூர்வீகக் குடிகள் கரீப்ஸ் என்ற இனத்தைச் சார்ந்தவர்கள். அதனாலேயே இப் பிரதேசம் கரீபியன் என அழைக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் ஐரோப்பியர் முதன் முதலாக 15ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்தனர். புதிய கண்டமாகிய அமெரிக்காவை 1492ல் கொலம்பஸ் கண்டறிந்ததை எல்லோரும் அறிவார்கள். இந்தியாவை கண்டு பிடிப்பதற்காகவே கொலம்பஸ் கடல் யாத்திரையை ஆரம்பித்தார். அக்காலத்தில் இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ் உள்ளடக்கிய பிரதேசம் இன்டீஸ் என அழைக்கப்பட்டது. இந்தியாவை அடைய மேற்கு நோக்கிச் செல்ல வேண்டுமென எண்ணிய கொலம்பஸ் இன்றைய பகாமாஸ் (Bahamas), தீவுக்குச் சொந்தமான தீவொன்றில் வந்து இறங்கியவுடன் தான் இந்தியாவை சென்று அடைந்து விட்டதாக அறிவித்தார். ஆனால் அது இந்தியாவல்ல ஒரு புதிய கண்டம் என நிரூபிக்கப்பட்டது. ஆயினும் கொலம்பஸின் முயற்சிக்கு மதிப்புக் கொடுத்து அப்பிராந்தியத்திற்கு மேற்கு இந்தியா என்ற பெயர் சூட்டப்பட்டது (West Indies).

கொலம்பஸ் இத் தீவுக் கூட்டங்களைக் கண்டுபிடித்ததை அடுத்து வந்த நூற்றாண்டுகளில் ஐரோப்பிய பலவான்களாகிய ஸ்பெயின், பிரிட்டின், நெதர்லாந்து , பிரான்ஸ் முதலிய நாடுகள் இங்குள்ள தீவுகளைக் கைப்பற்ற போட்டி போட்டன. இதனால் இங்கு பல போர்கள் ஏற்பட்டன. பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்த பாரிய நாடாகிய அமெரிக்கா 1786ல் சுதந்திரம் பெற்றவுடன், தானும் இத்தீவுகளில் சிலவற்றைக் கைப்பற்ற வேண்டுமென இக் களத்தில் நுழைந்து பல தீவுகளைத் தன் வசமாக்கியது. இத்தீவுகள் எந்த நாட்டின் ஆதிக்கத்துக்குள் உட்படுத்தப்பட்டதோ அதனையே அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்பட்டன. உதாரணமாக பிரிட்டிஷ்



கனகேஸ்வரி நடராஜா
ஆசிரியர், இலங்கை-கனடா

மேற்கு இந்தியத் தீவுகள், பிரெஞ்சு மேற்கு இந்தியத் தீவுகள் என்பனவாகும். ஆனால் யுத்தங்கள் தொடர்ந்து நடந்தபடியே இருந்ததால் ஒவ்வொரு பெயர்பட்டியலிலும் இருந்த தீவுகளின் பெயர்கள் அடிக்கடி மாறியபடியே இருந்தன.

இத்தீவுகளின் சுவாத்தியம் கரும்புத் தோட்ட செய்கைக்கு ஏற்றதாக இருந்ததால் இவை இன்றும் கரும்புச் செய்கைக்குப் பெயர் பெற்று விளங்குகின்றன. வெள்ளை இனத்தவர்கள் இக் கரும்புத் தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காக ஆபிரிக்க அடிமைகளை இறக்குமதி செய்தனர். பின்பு ஆசிய நாடுகளிலிருந்தும் தொழிலாளர்களை வருவித்தனர். இதனால் இத்தீவுகளில் கிறீஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் காணப்படுகின்றனர். ட்ரினிடாட் தீவில் தீபாவளி ஒரு அரசாங்க விடுமுறை தினமாகும்.

பிரித்தானியரின் ஆதிக்கத்தில் இருந்த காலனித்துவ நாடுகளில் அவர்கள் விட்டுச் சென்ற முக்கிய சுவடுகளில் ஒன்று கிரிக்கெட் விளையாட்டாகும். இன்று சுதந்திரம் பெற்ற பின்பும் இந் நாடுகள் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்குகின்றன. பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகள் 150 வருடங்களுக்கு முன்பே கிரிக்கெட்டில் பெயர் பெற்று விளங்கியது. இங்கிலாந்தில் இருந்து செல்லும் குழுக்களுக்கும் மேற்கிந்தியத் தீவுகளில் குடியிருந்தோருக்கும் இடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. இதில் முக்கிய அம்சம் யாதெனில் அக்காலத்து பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளின் அணியில் அங்கம் வகித்தோர் யாவரும் அங்கு வாழ்ந்த வெள்ளை இனத்தவர்களேயாகும். காலப் போக்கில் கறுப்பு இனத்தவர்களும் இவ்வணியில் விளையாட அனுமதிக்கப்பட்டனர். முதலில் பிரித்தானியா தனிப்பட்ட முறையில் பார்படோஸ் ஜமெக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று விளையாடியது. பின்பு ஜமெக்கா, பார்படோஸ், டிரினிடாட் ஒன்றிணைந்து இங்கிலாந்துக்கு எதிராக விளையாடின. இதனை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட மேற்கிந்தியக் கூட்டணி எனக் கூறலாம். தற்பொழுது மேற்கிந்தியத் தீவுகளில் பல சுதந்திரம் பெற்றுவிட்டன.

மேற்கிந்தியத் தீவுகளைச் சார்ந்த பல தீவுகளின் வீரர்கள் ஒரே அணியாக போட்டிகளில் பங்குபற்றத் தொடங்கினார்கள். இவ் அணி டெஸ்ட் அந்தஸ்தையும் பெற்றது. இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்திய அணி பங்குபற்றியதோடு மாத்திரமல்லாமல் 1970களில் ஏனைய நாட்டு அணிகளை கதிகலங்கச் செய்தது. 1975, 1979 களில் உலக சம்பியனாகவும் பெயர்பெற்றது. தற்பொழுது நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகள் மேற்கிந்திய கிரிக்கெட் சபையினால் தான் நடைபெற்றன. இதில் அங்கம் வகிக்கும் நாடுகள் -

1. அன்டிகுவா அன்ட் பார்புடா (Antigua & Barbuda)
2. பார்படோஸ் (Barbados)
3. ட்ரினிடாட் அன்ட் டுபாகோ (Trinidad and Tobago)
4. கிறனடா (Grenada)
5. கயானா (Guyana)
6. ஜமெக்கா (Jamaica)
7. சென்கிட்ஸ் அன்ட் நேவிஸ் (St.Crets and Navis)
8. சென் லூசியா (St.Lucia)
9. சென் வின்சன்ட் அன்ட் கிறனடியன்ஸ் (St. Vincent and the Granadines)
10. டொமினிகா (Dominica).

மறுபக்கம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்
## *கனடியக் காட்சிகள்*

# என்ன பா?

கனடாவில் எதற்கும் தட்டுப்பாடில்லை. கவிஞர்களுக்கும் பஞ்சமில்லை. ஊடகங்கள் கவிஞர்களுக்கு நல்ல களம் அமைத்துக் கொடுக்கின்றன. பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் ஏராளமான கவிதைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இவற்றை ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, வெண்பா, விருத்தப்பா என்று மரபு வகையில் வகுப்பது கடினம். ஏனெனில் பெரும்பாலானவை வரிக் கவிதைகள். அதனால் புதுமுறையாக இவற்றைப் பின்வருமாறு வகுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

1. வெறும்பா: ஒன்றும் இல்லாத பா(கவிதை) என்று பொருள். கனடியத் தமிழ் இதழ்களில் வெளிவரும் கவிதைகளில் அனேகமானவை இவ்வகையைச் சேர்ந்தவை. இவை சொற்சுவையோ பொருட்சுவையோ இல்லாதவை. கவிச்சுவை என்றால் என்ன என்று தெரியாதவர்கள் இவற்றைப் பாடுவர் - இல்லை எழுதுவர். இவர்களுக்குக் கவிதை மரபோ தமிழ்க் கவிதையில் தோய்ந்த அனுபவமோ கிடையா. வசனங்களை முறித்து முறித்து எழுதினால் கவிதையாக வரும் என்று நினைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் இவர்கள் கவிஞர்களே அல்லர்.

2. நறும்பா: இனிய கவிதை என்று பொருள். இரண்டாம் முறையும் படிக்கத் தூண்டும் கவிதைகள் இவ்வகையைச் சேர்ந்தவை. பார்த்த ஒரு பூவை மீண்டும் பார்க்க வேண்டும் போல இருந்தால் அதில் ஏதோ ஒரு கவர்ச்சி இருக்கிறது என்று பொருள். அதுபோல படித்த ஒரு கவிதையை மீண்டும் படிக்க வேண்டும் என்ற அவா தோன்றினால் அதில் கவர்ச்சி காந்தம் வாசிக்கிறது என்பது வெளிப்படை.

3. விறும்பா: விறுவிறுத்தல் சுருங்கி விறும்பு ஆயிற்று எனக் கொள்க. ஒரு கவிதையைப் படித்த அளவில் உடம்பில் ஏதோ ஊர்வது போன்ற உணர்வை அல்லது விறுவிறுப்பைத் தோற்றுவிக்கும் கவிதைகள் இவ்வகையைச் சேர்ந்தவை. உண்மையில் உணர்வு அலை ஒன்றை ஊசி ஏற்றுவதுபோல் பாய்ச்சும் கவிதை நல்ல கவிதை. சிலர் அப்படிப் பாடுகிறார்கள் என்பதும் உண்மை.

4. இறும்பா: இறும்பு என்பது புதர்க்காடு. இத்தகைய கவிதைகள் காட்டுக்குள் பாதை தெரியாமல் தடுமாறுவதைப் போன்று இதுதான் பொருள் என்று அறிய முடியாமல் வாசகரை மயங்க வைப்பவை.

5. பெறும்பா: இவை பிற கவிஞர்களிடமிருந்து சொல்லாகவோ பொருளாகவோ வடிவமாகவோ பெறப்பட்ட இரவல் சரக்குகள்.

6. குறும்பா: இவை நகைச்சுவைக் கவிதைகள். பலர் சிரிப்பூட்டும் நல்ல கவிதைகளைப் படைத்து வருகிறார்கள். ஆனால் அவற்றையெல்லாம் குறும்பா என்று அழைக்கலாமோ என்பதுதான் கேள்வி. ஏனென்றால் ஆங்கிலத்தில் உள்ள Limericks என்ற கவிதை வடிவத்துக்கு மஹாகவி கொடுத்த தமிழ்ப்பெயர் குறும்பா. அதற்கு அவர் இலக்கணமும் அமைத்துத் தமிழ் அன்னைக்கு ஆரமாகச் சூட்டிவிட்டுச் சென்றிருக்கின்றார். அவரது குறும்பா என்ற நூலில் உள்ள 100 பாடல்களில் ஒன்று இது:

தொலைபேசி யிற் பேசிப் பேசித்
தொந்தரவுக் குள்ளானான் காசி
மலரை மணந் தான் எனினும்
வாழ்கின்றான் - மீண்டும் அதே
தொலை பேசி யிற் பேசிப் பேசி.

இதுவே உண்மையான குறும்பா. பாடல் அமைப்பையும் சீர் ஒழுங்கையும் கவனித்துப் பாட முயற்சி செய்க. முயற்சி திருவினையாக்கும்.

கவிதைக் கலையை வளர்க்க வேண்டும் என்கின்ற நோக்கம் நல்ல நோக்கம். பத்திரிகை ஆசிரியர்களும் வானொலி அதிபர்களும் தரமானவற்றையே வெளியிட வேண்டும் என்பது எனது நோக்கம்.

### மேற்கிந்திய...

இதில் முதல் எட்டு நாடுகளிலும் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றன. செனட் வின்சென்ட்டில் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான பயிற்சிப் போட்டிகள் நடைபெற்றன. மேற்கிந்திய கிரிக்கெட் சபையைச் சார்ந்த நாடுகளில் இருந்தே கிரிக்கெட் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு மேற்கிந்திய அணி அமைக்கப்பட்டது. கிரிக்கெட் தவிர்ந்த ஏனைய போட்டிகளில் இவை தனித்தனியாகவே பங்குபற்றும். மேற்படி நாடுகளுக்குச் செல்வதானால் தனித்தனியே விசா பெற வேண்டும். ஆனால் உலக கிண்ணப் போட்டிகளுக்குச் சில விதிவிலக்குகள் காணப்பட்டன. இந்தப் பத்து நாடுகளின் அரசாங்கங்களும் தனித்தனியே இயங்கும் சுதந்திரம் உடையன.

இவ்வாறு பல நாடுகளைச் சார்ந்த வீரர்களை ஒன்றிணைத்து ஒற்றுமையாக விளையாடியதன் விளைவாக இந்நாடுகளை ஒன்றிணைத்து ஒரே நாடாக ஆக்குவதற்கான முயற்சிகளும் இடம்பெற்றன. இவ்வாறு உருவாக்கப்பட்ட நாட்டின் பெயர் மேற்கிந்தியச் சம்மேளனம் (West Indies Federation). ஆனால் இதன் ஆயுட்காலம் நான்கு வருடங்கள் மாத்திரமே (1958-1962). இரண்டாம் எலிஸபெத் மகாராணியே இதன் தலைவராக விளங்கினார். ஒரு கவர்னர் ஜெனரலும் நியமிக்கப்பட்டார். சமஷ்டி நாடாளுமன்ற மொன்று அமைக்கப்பட்டு 19 அங்கத்தவர் களைக் கொண்ட பிரதிநிதிகள் சபையும் நிறுவப்பட்டது. டிரினிடாட் டுபாகோவின் தலைநகரான போர்ட் ஒவ் ஸ்பெயினுக்கு சில மைல் தூரத்தில் உள்ள சகுவாராமஸ் என்னும் நகரம் மேற்கிந்தியச் சம்மேளனத்தில் தலைநகராகத் தெரிவு செய்யப்பட்டது. மேற்கிந்தியச் சம்மேளனம் ஒரு பலவீனமான கட்டமைப்பையே கொண்டிருந்தது. இரு பெரிய மாகாணங்களான ஜமெக்கா, ட்ரினிடாட் - டுபாகோ ஆகியவற்றுக்கும் சிறிய மாகாணங்களுக்கும் இடையே சச்சரவுகள் ஆரம்ப காலத்திலேயிருந்தே காணப்பட்டது. பெரிய தீவுகளின் பொருளாதாரம் சிறிய தீவுகளின் பொருளாதாரத்தை விழுங்கிவிடுமோ என்ற பயமும் காணப்பட்டது. இத்தகைய பிரச்சனைகளால் ஒவ்வொரு நாடும் தனித்தனியே விலகிப் போயின. இன்று இவை யாவும் தனிச் சுதந்திர நாடுகளாக விளங்குகின்றன. இச் சம்மேளனத்தில் அங்கம் வகித்த மொனட் சேராட் பிரிட்டனுக்கு சொந்தமாக நீடிக்கிறது. இச்சம்மேளனம் உருவாகியதில் ஒரே ஒரு நன்மை ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் ஜமெக்காவிலிருந்த பல்கலைக்கழகம் விரிவுபடுத்தப்பட்டு மேலதிக வளாகங்களும் வெவ்வேறு தீவுகளில் அமைக்கப்பட்டன. ஆகவே மேற்கிந்தியத் தீவுகள் என்பது ஒரு தனி நாடு அல்ல. 7,000க்கு மேற்பட்ட சிறியதும், பெரியதுமான தீவுகளைக் கொண்ட ஒரு பரந்த பிரதேசமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூகைக்கட்டு நோய் றொறன்ரோவில் பரவலாம்! சுகாதாரப் பிரிவு அறிவிப்பு

றொறன்ரோவில் கூகைக்கட்டு நோய் பரவலாம் என றொறன்ரோ பொதுசுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். கிழக்கு கடற்கரைப் பிரதேசங்களில் ஆரம்பித்த இந்நோய், றொறன்ரோ கென்சின்ங்ரன் சந்தை மதுச்சாலையில் களியாட்டக்காரரிடையே பரவியிருக்கலாம் என சுகாதார சேவையினர் எச்சரிக்கின்றனர்.

ஹலிபக்சின் பாடசாலையொன்றிலிருந்து இரு மாணவியர் தொற்றுதலுக்குள்ளாகியதாக நோய்த் தடுப்பு பிரிவின் பேச்சாளர் டாக்டர் பார்பரா கூறியிருக்கின்றார்.


நோவா ஸ்கோஷியாவில் மாத்திரம் 200க்கும் மேற்பட்டவர்கள் கூகைக்கட்டு நோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். இம்மாணவிகள் அறியாமலேயே இந்நோயை றொறன்ரோவிற்கு காவியுள்ளனர். அத்துடன் அவர்களில் ஒருவர் மூலம் இன்னொரு ஆணிற்கும் பரவியுள்ளது.

அந்த ஆண் கடந்த மாதம் 10ம் திகதியன்று இரவு 268 Augusta Ave இல் உள்ள (College Street and Spadina Ave) அங்காடியிலும் மதுச்சாலையிலும் நோய் பரப்பியாகத் திரிந்துள்ளார்.

இதனால் அவ்விடங்களில் மே 10ம் திகதி இரவு 9 மணியிலிருந்து மே 11ம் திகதி காலை 3 மணிவரை நின்றவர்களை, கூகைக்கட்டு தொற்றியதற்கான அறிகுறிகள் தென்படின் தமது வைத்தியர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதார சேவையினர் வேண்டுகின்றனர்.

அறிகுறிகள் நோய் தொற்றிய 12 இலிருந்து 25 நாட்களின் பின் தோன்றலாம். இந்நோய் உமிழ்நீர் மூலமே தொற்றக்கூடியது.

குளிர்பானங்களை பங்கிடல், சிகரட்டை பங்கிடல், முத்தமிடல் மூலம் தொற்றலாம். உமிழ்நீர் சுரப்பிகள் வீங்குதல், தலையிடி, காய்ச்சல், வலிகள், சோம்பல், பசியின்மை ஆகியன சில அறிகுறிகளாகும்.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை** தொடர் 9

## நாயின் மொழி

**குரைப்பு....**

நாய்கள் எழுப்பும் ஒலியை இவ்வாறுதான் அழைக்க வேண்டும் என இலக்கணம் கூறுகின்றது. ஒவ்வொரு விலங்கினதும் ஒலிகளுக்கு வெவ்வேறு பெயர்களை இட்டிருக்கின்றது இலக்கணம். செழுமை பெற்ற தமிழ்மொழிச் சிறப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

நாய் மனிதனை அண்டி வாழ்கின்ற பிராணி. விலங்கினத்தோடு இணைந்து வாழத் தெரியாத விலங்கு. மனிதரைத் தவிர எந்த உயிரோடும் உறவாடி அறியாத உயிரினம்.

வளர்த்த மனிதரைக் கண்டு வாலை ஆட்டவும், ஏனையோரைப் பார்த்து குரைக்கவும் தெரிந்திருப்பதுதான் மனிதரிடையேயான நாயின் மதிப்புக்குக் காரணம்.

மனிதருக்கு உணர்வை வெளிப்படுத்த மொழி உண்டு. நாய்க்கும் உணர்வுகள் உண்டு. வெளிப்படுத்த மொழியும் உண்டு. நாய்க்கு மட்டுமல்ல... எல்லா விலங்குகளுக்கும் மொழி உண்டு. விலங்கின் மொழி விலங்குக்குப் புரியும் என்பர். ஆனால் ஒரு நாயின் மொழி இன்னுமொரு நாய்க்கு புரியும் என்பதில் ஐயப்பாடுகள் உண்டு. பொதுவாக எந்தவொரு நாயும் தமக்கிடையேயான மொழித் தொடர்பாடல் ஊடாக, ஒரு உடன்படிக்கைக்கு வந்ததாகச் செய்திகள் இல்லை.

நாயின் மொழியை மனிதர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். எல்லா மனிதர்களும் அல்ல.... எப்போதும் அல்ல... எந்த நாயை எவர் வளர்க்கின்றாரோ அந்த நாயின் மொழியை அவர் பயன்படுத்திக் கொள்வர். அந்த மொழி கூட தன்னை அல்லாத பிறரை நோக்கிப் பேசப்படுவதைத் தான் வளர்ப்போர் விரும்புவர். தன் நாய் அல்லாத பிற நாய்களின் மொழியை பொதுவாக எவரும் விரும்புவதில்லை.

கூண்டுக்குள் அல்லது வீட்டின் வளவுக்குள் நிற்கும் நாய்கள் அறிமுகமில்லாத எவரைக் கண்டாலும் குரைக்கத் தொடங்கி விடுகின்றன. சிலவேளை அறிமுகமானவர்களையும் விட்டுவிடுவதில்லை.

குரைத்தலுக்காகவே பல நாய்கள் வளர்க்கப்படுவதால் நாய் குரைத்தலில் தப்பில்லை. நாய் வளர்ப்பின் நோக்கம் தீயோரைத் திருடரை இனம் கண்டு குரைப்பதற்கே. ஆயினும் சில நாய்கள் தேர்ந்த திருடர்களின் தின்பண்டங்களுக்கு மயங்கிவிட்டு, வழிப்போக்கரைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கி விடுகின்றன.

நாயின் பெரும்பாலான குரைப்புகள் அர்த்தமற்றவையே. பெரும்பாலும் எந்த விலங்குகளும் நாயைப் போல் ஒலியெழுப்பி தம் இருப்பைப் புலப்படுத்துவதில்லை. நாயின் இருப்பே குரைப்புதான். அதனாற்தான் குரைப்பதற்குக் காரணமில்லாத வேளைகளில் நிலாவைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கி விடுகின்றன.

"நக்குகிற நாய்க்கு செக்கென்ன... சிவலிங்கமென்ன.... " என்ற வழக்கு தமிழில் உண்டு. குரைக்க வேண்டும் என்ற நினைவு கொண்ட நாய்க்குக் குரைப்பதற்குக் குறிக்கோள்கள் இருப்பதில்லை. எவ்வாறு நாயின் வாலை நிமிர்த்த முடியாதோ அதுபோல் நாயின் அர்த்தமற்ற குரைப்பையும் நிறுத்த முடிவதில்லை.

நாயைக் கடக்கின்ற மனிதர் பெரும்பாலும் தொடர்பில்லாத ஒரு நாயின் குரைப்பைப் பொருட்படுத்துவதில்லை. தன் குரைப்பை யாராவது பொருட்படுத்துகின்றனர் எனக் குறித்த நாய் தெரிந்து கொண்டால், அது தீவிரமாகக் குரைக்கத் தொடங்கி விடுகின்றது.

காரணமின்றிக் குரைக்கும் நாய்க்குப் பதில் கூற, தெளிவான எந்த மனிதனும் முனைவதில்லை. நாயின் குரைப்புக்கு எதிர்வினை காட்ட முயலும் எந்த மனிதனும் நாயின் தரத்திற்கே இறங்க வேண்டியிருக்கின்றது.

ஒருவகையில் பார்த்தால்,
நாய்களின் இத்தகைய செயற்பாடுகள் வாழ்வுக்கு சுவாரசியம் தந்துவிடுகின்றனவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்
எழுதுவது

# மாத்திரையில் ஒரு மயக்கம்!

மாத்திரைகள் நோயின் தாக்கத்தைத் தடுக்கும். எனினும் அதன் பாவனைக் குறியீடுகள் விளங்காவிடின் மாத்திரை நேரமளவாவது மனசு தவிக்கும்.

அந்தக் குறியீடுகள் பற்றிய அடிப்படை அறிவை பெறுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள் கோடைகால சுற்றுலாப் பயணிகள் என்கிறது மருத்துவ ஆய்வு.

எச் சந்தர்ப்பத்திலும் அது புரியாவிடின் மருத்துவரின் ஆலோசனையை உடனடியாக நாடுமாறும் எச்சரிக்கின்றது அது.

மாத்திரைகளின் பாவனைக் குறியீடுகளை அமெரிக்கா அனுஷ்டிப்பது அரிது. ஆனால் இதர பல நாடுகள் அவற்றை அனுசரிக்கின்றன.

OTC மருந்து என்பது மருத்துவ வட்டாரங்களில் அடிக்கடி பாவிக்கப்படும் கசப்பில்லாத ஒரு சொல். Over the counter மருந்து என்பதனையே அது குறிக்கின்றது என்பதை ஆரோக்கியசாலிகளும் அறிவர்.

அடுத்த தடவை ஆஸ்பத்திரிக்குச் செல்ல நேரிடின் அங்கே நேரவாளர் எவர்க்கேனும் அருகே GSW என்ற எழுத்துக்கள் காணப்பட்டால் அதன் அர்த்தம் அவர் விரும்பும் போது சாகலாம் என்பதல்ல.

Gun shot wound என்பதை அது குறிப்பது தெரியவரின் சுவாசகணத்தில் எமது இதயமும் வெடித்துச் சிதறி ரணமாகும்.

மருந்துச் சீட்டுகளில் Rx என்றிருப்பது என்னவெனக் கேட்டால் பதில் உடனே நினைவுக்கு வராது வருத்தமடைவர் சில மருத்துவர். தமிழ்மொழிக்கு இனிமையான மொழி என்ற மகோன்னதம் உண்டு. அதேபோல லத்தீன்மொழிக்கு அபூர்வமான மருத்துவமொழி என்ற மகத்துவம் உண்டு.

விளங்கிக் கொள்ள முடியாத லத்தீன் மொழியில் Rx என்றால் விழுங்கிக் கொள் என்று அர்த்தமாம். அதாவது உள் எடு என்ற லத்தீன் வார்த்தையின் சொற் சுருக்கமாம்.

agit agita என மாத்திரைக் குப்பி அடையாளம் பெற்றிருப்பின் அஜீத்தைப் போல நடிகனாகப் போகின்றோம் என உதட்டை மூளை எச்சரிக்கக் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல. மாத்திரைகளை தண்ணீரில் கலக்கி குலுக்கி குடியுங்கள் என்பதே சரி.

q.h. Quaque hora இந்த மாத்திரையை ஒவ்வொரு மணித்தியாலமும் உட்கொள்ள வேண்டும் என்பதை நோயாளிக்கு நினைவுறுத்தி.... ஓ! மாத்திரை என்பது வருத்தக்காரன் கைகளில் ஓர் அதிசயமான ஆயுதம் என மெலிதாய் பாட வைக்கும்.

q.2h quaque 2 hora என்றிருந்தால் நோயாளி இரு மணி நேரத்திற்கு ஒரு தரம் பாட்டுப் பாடுவானோ இல்லையோ.... மருந்தை மட்டும் இரண்டு மணித்தியால அவகாசத்தில் உட்கொள்ள வேண்டும்.

s.o.s. si opus sit எனின் நோய் நாட்களில் மாத்திரம் பாவித்துவிட்டு மிகுதி நாட்களின் என்றாவது திரும்பவும் நீ தேவைப்படலாம் என்ற உணர்வுடன் எட்டாத தூரத்தில் வைக்கலாம்.

pm pro re nata என்றாலோ அவசியம் ஏற்பட்டால் மட்டும் எடுத்து விட்டுப் பின்னர் 'அப்பாடா' என்றிருக்கலாம்.

ss semis என்பது பாதியை மட்டும் பாதிப்புள்ள நாட்களில் எடுக்க வேண்டும்.

h.s. hora somni எனக் காணப்பட்டால் வருத்தம் தராத கனவு காணப் போகின்றார் என்று அர்த்தப்படுத்தலாம். ஏனெனில் நித்திரைக்கு முன்பாக எடுக்கப்பட வேண்டியது இந்த மாத்திரை. எடுக்க மறந்தால் அன்றிரவு நிலவோடு சினேகிதம் வைக்க வேண்டியது தான்.

q.d. என்பதை தினந்தோறும் எனப் பொருள் கொண்டால் quaque die என்ற லத்தீன் விரிவாக்கம் விளங்கவில்லை என வருந்தத் தேவையில்லை.

t.i.d. ter in die என்பது எக்காலம் எனின் தினமும் முக்காலம் என்றும் q.i.d. quater in die என்பது அனுதினமும் நாற்காலம் என்றும் இக்காலத்தில் சொல்லி வைப்பது பயன்பட்டால் நற்காலம்.

இடுக்கண் உள்ள இரு கண்களிலும் இடு o.u. ocuius uterque இரு காதுகளுக்கும் உரியது a.u. auris utrae இதனால் இனிக் காதில் வலி இருக்காது.


p.o. per os எனின், இம் மாத்திரையை வாயால் உட்கொள்வாய் - நலம் பெறுவாய் - மகிழ்வாய்.

பசிக்காகச் சாப்பிட்டாலென்ன.... ருசிக்காகச் சாப்பிட்டாலென்ன உணவுக்கு முன்பாக எடுக்க வேண்டிய மருந்துக் குறிப்பு a.c. ante cibum

உணவை நீங்கள் உண்டபின் அல்லது உணவு உங்களை உண்டபின் எடுக்க வேண்டிய மாத்திரையின் பாவனைக் குறியீடு p.c. post cibum

வகை வகையான மாத்திரைகள் விதம் விதமான வடிவங்களில் இருப்பினும் மாத்திரை மயக்கம் தெளிந்தால் வெறுப்பும் கசப்பும் பீறிடாது. காரணமற்ற கோபம் பொங்கி வழியாது.

ஆனால் எதுவும் புரியாவிடின் ஒரு மாத்திரை நேரத்திற்கு கண்கள் இமைக்கும். கவனம் தடுமாறும். சோக வர்ணம் பூசும் முகம். வாழ்க்கை கனக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறமகளின் ஆய்வு நூல் வெளியீட்டு விழா

எழுத்துலகில் பொன்விழாக் கண்ட மூத்த எழுத்தாளர் குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) அவர்களால் எழுதப்பெற்று கொழும்பில் குமரன் பதிப்பகத்தால் அச்சேற்றப்பட்ட 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு' என்னும் நூலின் வெளியீட்டு விழா இந்த மாதம் 16ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ஸ்காபரோ சிவிக் சென்டரில் பிற்பகல் 5:30 மணி முதல் இவ்விழா கனடிய சட்டத்தரணி திருமதி தெய்வா மோகன் தலைமையில் நடைபெறும். மேர்ளின் இமானுவல், மைதிலி சோமசுந்தரம், பேராசிரியர் செல்வா கனகநாயகம், கவிஞர் உ. சேரன் ஆகியோர் நூலை ஆய்வுரை செய்வர். பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆழமான அணிந்துரையொன்றினை நூலுக்கு வழங்கியுள்ளார். ரொறன்ரோவில் இயங்கும் தென்னாசிய பெண்கள் நிலையத்தின் அனுசரணையுடன் விழா ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், நண்பர்கள், இலக்கிய உறவுகள், மாணவர்கள் அனைவரையும் நூலாசிரியர் அன்புடன் அழைக்கின்றார் தொடர்புகளுக்கு: 416 536 8445

## கனடிய எம். பிக்கள் எண்ணிக்கை 330 ஆக அதிகரிக்கும்?

கனடிய கன்சர்வேடிவ் அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட சட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுமானால், கனடாவின் வேகமாக வளரும் மாகாணங்கள் 2014ம் ஆண்டளவில் மேலதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறுவர்.

முறையே ஒன்ராறியோ 10, பிரிட்டிஷ் கொலம்பியா 7, அல்பேர்ட்டா 5 எம். பிக்களை அதிகமாகப் பெறும் மாகாணங்களாகும். மற்றைய மாகாணங்கள் விரைவான சனத்தொகை அதிகரிப்பைக் கொண்டிராவிடினும் தற்போதைய எம். பிக்கள் தொகையில் மாற்றம் ஏற்படாது என உறுதியளிக்கப்படுகிறது. தற்போதைய மொத்த எம். பீக்களின் எண்ணிக்கையான 308 இலிருந்து 330 ஆக அதிகரிக்கவுள்ளது.

புதிய திட்டத்தின் படி அல்பேர்ட்டாவுக்கு 33 தொகுதிகள். (தற்போது 28 தொகுதிகள்) பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு 43 தொகுதிகள். (தற்போது 36 தொகுதிகள்). ஒன்ராறியோவுக்கு 116 தொகுதிகள் (தற்போது 106 தொகுதிகள்).



குயின்ரஸ் துரைசிங்கம்

13

**கணினிப் பக்கம்**

## காக்க காக்க கணினி காக்க...

மீண்டும் கணித்தலுக்குள் வந்துவிட்டால், அபக்குஸ் என்ற இந்த கணிக்கும் கருவியைத் தழுவி, பின்னர் பிறப்பெடுத்தவையாக சீனர்கள் பயன்படுத்தும் அஸ்ரோலப் (astrolabe) என்ற சக்கர கணிப்பீட்டியந்திரம் காணப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் அடியெடுத்துக் கொடுத்த ஒன்றாக, அன்றிகைத்ரா (Antikythera) என்றழைக்கப்படும் கல்லில் செதுக்கப்பட்ட சக்கரம் அறியப்படுகின்றது. மகாபாரதத்தில் வரும் சுதர்சனம் என்ற, கிருஷ்ணபரமாத்மாவின் கையிலுள்ள சக்கரம், கணினியுலக வரலாற்றின் மூலாதாரமாக, கணினிக் கருக்கூட்டலின் முட்டையாக, சிந்துநாகரிகத்தின் முழுமுதல் நாகரிக தோற்றப்பாடாக வெளிப்பட்டு நிற்பதை கருத்திலெடுப்பது அவசியமாக இருக்கிறது.

### கணினியின் வளர்ச்சிப் படிகள்

மேலைத்தேய விஞ்ஞான நாகரிகம், கீழைத்தேய இயற்கை நாகரிகத்துடன் போட்டிபோட ஆரம்பித்ததால், மேற்குலகில் பிரபல்யமடைந்த பென்சில்களும் பேப்பர்களும், கீழைத்தேய 'அபக்குஸ்' கணித்தல் வளர்ச்சியை மழுங்கடித்து விட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஒரு பக்கத்தில் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளும் ஆய்வாளர்கள், மறுபக்கத்தில், கீழைத்தேய நாகரிகத்தை வளர்த்தெடுக்கும் பொறுப்பை உரியவர்கள் உரிய முறையில் வேகப்படுத்தத் தவறியதற்கு, மேலைத்தேய வளர்ச்சியைக் குறைகூறுவது தவறு என்றும் வாதிடுகிறார்கள்.

பென்சில்களும் பேப்பர்களும் பிறப்பெடுத்த பின்னர், மொழி ரீதியான அறிவியல் பயன்பாடு வேகமாக வளர்ந்து வந்தால், கிட்டத்தட்ட 12 நூற்றாண்டுகளுக்கும் மேலாக, இந்த கணித்தல் இயந்திரம் அல்லது கணினியின் வளர்ச்சி தாமதமடைந்தது.

1642ம் ஆண்டு, பிரான்சில் வரி அறவீட்டாளர் ஒருவரின் 18 வயது மகனான பிளெய்ஸ் பாஸ்கல் (Blaise Pascal) என்பவர், தனது தந்தையின் கணித்தல் சிரமங்களைப் பார்த்துவிட்டு, அதற்கு உதவும் நோக்குடன், 'பாஸ்கலின்' (Pascaline) என்ற ஒரு கணித்தல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். எண் சுழற்றி கணிப்பொறி (Numerical Wheel Calculator) என்ற இந்த இயந்திரத்தில், ஆரம்பகால தொலைபேசி சுழற்றி இலக்கங்கள் போன்று, எட்டு இலக்கங்கள் வரை மொத்தமாகக் கூட்டல் கணக்கைச் செய்யும் வகையில் இந்த இயந்திரம் செயற்பட்டது. இது அந்த நாளில் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகக் கருதப்பட்ட போதிலும், எட்டுக்கு மேற்பட்ட இலக்கங்களைக் கூட்டுவதில் சிரமங்கள் காணப்பட்டது.

1694ல் ஜேர்மன் நாட்டு தத்துவஞானியும் கணித நிபுணருமான கொட்பிஃரீட் வில்ஹெம் வொன் லீப்நிஷா என்பவர், 'பாஸ்கலின்' இயந்திரத்தை நவீனமாக்கி, அதிக இலக்கங்கள் கொண்டதாக, கூட்டலுடன் பெருக்கல் கணக்கையும் செய்யும் வகையில் புதிய இயந்திரமாக அறிமுகப்படுத்தினார்.

இருப்பினும், 1820ல், பிரான்ஸ் நாட்டவரான சார்ள்ஸ் சேவியர் தோமஸ் டி கொல்மார் என்பவர் உருவாக்கிய கணிப்பொறி இயந்திரமே, பரவலாக வரவேற்பைப் பெற்று, கணித்தலை இயந்திரமயப்படுத்தியதாகக் கருதப்படுகிறது. இவர் வெளியிட்ட அரித்தோமீற்றர் (Arithometer) என்ற இயந்திரம், கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்ற நான்கு வகை கணித்தலையும் இலகுவாக செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது. முதலாம் உலகப்போர் வரை, இந்த அரித்தோமீற்றர் இயந்திரம் பரவலான பாவனையிலிருந்தது. இப்படியான கணிப்பொறி இயந்திரங்கள் பாவனைக்கு வந்திருந்த காலப்பகுதியில், சார்ள்ஸ் பாபேஜ் என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த கணித விரிவுரையாளரே கணினி என்ற இலத்திரனியல் சார்ந்த கணித்தல் இயந்திரமொன்றை முதன் முதலில் அறிமுகம் செய்தவராவார். நீராவி ரயில்களின் செயற்பாட்டைத் தழுவி, நீராவியில் இயங்கும் இயந்திரத்தின் உதவியுடன், தர்க்கரீதியான (analytical) இயந்திரமொன்றை இவர் உருவாக்கினார். 50 ஆயிரம் தொகுதிகளை (components) உள்ளடக்கியதாக, ஒருவர் உள்ளிடும் தகவல்களை நினைவில் வைத்திருக்கத் தக்க தொழில்முறையுடன் இது அமைக்கப்பட்டது. மிகப்பெரிய ஒரு ஆய்வுகூடம் போன்று அமைக்கப்பட்ட இந்த முதலாவது கணினியில், ஒவ்வொன்றும் குறைந்தது 50 இலக்கங்கள் நீளமுள்ள, மொத்தம் ஆயிரம் இலக்கங்களை நினைவகப்படுத்த வசதியேற்படுத்தப்பட்டது. இதுவே, உலகின் முதலாவது இலத்திரனியல் ரீதியான, நினைவகத் தன்மை கொண்ட ஒரு கணினி இயந்திரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## சாயம் போகின்ற புளுங்கல் அரிசி!

பார்த்தால் மாதுளம் முத்துப் போல, ஒரு கல்லோ உமியோ கிடையாது. அப்பிடியே எடுத்து வாய்க்குள் போட வேண்டும் போல பளபளப்பான முத்துப் போன்ற புளுங்கல் அரிசி.

ஒவ்வொரு கடையிலையும் இதற்கு ஒவ்வொரு கவர்ச்சிப் பெயர். சில இடங்களில் கைக்குத்தரிசி என்றும் பெயர் சொல்கிறார்கள்.

அதன் கவர்ச்சியில் வாங்கிச் சென்று, சோறாக்குவதற்கு முன் சற்றுக் கழுவத் தொடங்கினால்....தண்ணீர் சிவப்பு நிறத்தில் ஆரம்பித்து மண் நிறத்தில் முடிய.... அரிசி சாயம்போய் பழுப்பு நிற 'மில்சாட்'டாகக் காட்சியளித்தது.

அரிசிக்கும் கலர் அடித்து, அதாவது சாயம் தோய்த்து இங்கு நம்மவர் கடைகளில் விற்கின்றார்கள் என்றால் பாருங்களேன். இதனைப் போய் யாரிடம் புகார் செய்வது?

## வாழைப்பழ வியாபாரிக்கு தோல் காட்டும் வர்த்தகர்

ஸ்காபரோவில் தமிழர் கடைகளுக்கு வாழைப்பழ விநியோகம் செய்யும் இத்தாலியர் ஒருவர் சொன்ன கதை இது.

முதல் வாரத்து நிலுவையை அடுத்த வார விநியோகத்தின் போதே இவர் அறவிடுவது வழக்கம். ஒரு வார நிலுவை சுமார் நூறு டாலருக்கும் குறைவு. அதற்கு வழங்கும் காசோலைகளே அடிக்கடி திரும்புமாம்.

குறிப்பிட்ட ஒரு கடையில் அடிக்கடி ஆட்கள் மாறி கல்லாப்பெட்டியில் இருப்பர். "கடை கைமாறி விட்டது. இப்போது எங்கள் கடை" என்பதுடன் முன்னைய நிலுவை திவாலாகிவிடும். கடனடிப்படையிலான வாழைப்பழ விநியோகம் தொடரும்.

சுமார் இரண்டு வருடத்தில் ஆயிரம் டாலர் வரை இக்கடையில் மடங்கி நிற்கிறதாம்.
"கடை கை மாறவில்லை. அண்ணன் தம்பி மனைவி பிள்ளைகள் என்று கல்லாப் பெட்டியில் ஆட்கள்தான் மாறுகிறார்கள். ஒருநாளைக்கு எல்லாம் அம்பலாகும்" என்கிறார் அந்த இத்தாலியர்.

## தன்னப்பம் தன்னைச் சுட ஓட்டப்பம் வீட்டைச சுடுகிறது

கலைஞர் கருணாநிதி என்றால் அரசியலரங்கில் நாகரிகமான ஒரு காடையர் என்பது பலருக்கும் தெரியும். அது மட்டுமன்றி தி.மு.க என்றால் 'திருத்தமுடியாத முத்துவேல் கருணாநிதி'யின் குடும்பக் கட்சி என்பதும் பலருக்கும் தெரியும். இவை இன்று சகலருக்கும் தெரியவந்துள்ளது.

பேரன் தயாநிதி மாறன் செய்தது தவறாக இருக்கலாம். மகன் அழகிரி செய்த காடைத்தனமும் கொலைகளும் சரியா?

தயாநிதி மாறனை அமைச்சுப் பதவியிலிருந்து வெளியேற்றியது சரியாக இருக்கலாம். கொலைகார மகன் அழகிரியை வெளியே நடமாட விட்டிருப்பது சரியா?

எம். ஜி. ஆர், நெடுஞ்செழியன், வைகோ ஆகியோருக்குச் செய்த துரோகம்தான் இங்கும் இடம்பெற்றுள்ளது. இத்தனை பிரச்சனைகளுக்கிடையிலும் மகள் கனிமொழியை ராஜ்ய சபாவுக்குள் தள்ளி விட்டார்.

1969 முதல் இன்று வரை தலைவர் கதிரையை கெட்டியாகப் பிடித்திருக்கும் கருணாநிதியின் 'கதிரை மோகம்'தான் குடும்பம் பிளவுபட முக்கிய காரணி!

## மின்விசிறி சுழலுவதும் விமான ஓசையாகிறது

"இரவு வேளையானதும் எனது மக்கள் (சிங்களவர்) ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தவாறு உள்ளனர். வீட்டிற்குள் மின்விசிறி வீசும் சத்தம்கூட, விமான ஓசை போன்று அவர்களுக்குக் கேட்கின்றது. இதனால் நித்திரையின்றி இவர்கள் அல்லாடுகின்றனர். இதனை எவ்வளவு காலத்துக்குப் பார்த்தவாறு இருப்பது?".

மேற்கண்ட கேள்வியை எழுப்பியிருப்பவர் சிங்கள தேச அதிபர் மகிந்த ராஜபக்ஷ.

மார்ச் 25ம் திகதி ஆரம்பமான விடுதலைப் புலிகளின் வான்வெளித் தாக்குதலின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ சிறீலங்காவில் தங்கியிருப்பதைக் குறைத்து, அடிக்கடி வெளிநாடுகளுக்கு ஓடிச் செல்கின்றார்.

இரவு நேர விமானச் சத்தம் தொடர்பாக இவர் தெரிவித்த விடயம் பற்றி கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர், "தமது சொந்த அனுபவத்தை, பொதுவான பிரச்சனையாக்கிச் சொல்கின்றார்" என்று தெரிவித்துள்ளார்.

தனக்குத் தனக்கென வந்தால்தான், நெஞ்சு படக் படக்கென அடிக்குமாம்.

## சாப்பாட்டுக்குப் பின்னால் ஒழித்திருக்கும் காமரா

அண்மையில் கனடா வந்துபோன ஐரோப்பிய நண்பர் ஒருவர் மனம் கசந்து துவண்டு போயுள்ளார்.

அவர் இங்கு வந்தபோது மூன்று பேர் சேர்ந்து ஒரு நேரச் சாப்பாட்டுக்கு அழைத்தனராம். தனிப்பட்ட நட்பு ரீதியான விருந்து என எண்ணி அவரும் சென்று விட்டார். ஒரு உணவகத்தில் சாப்பாட்டு விருந்து இடம்பெற்றது.

அப்போது எடுக்கப்பட்ட படம் கனடிய தமிழ்ப் பத்திரிகை(?) ஒன்றில் பெரிய எடுப்புடன் போடப்பட்டு அவரைத் தலைகுனியச் செய்துவிட்டது.

பத்திரிகை நெறிமுறை என்ற ஒன்றே தெரியாமல் பேப்பர் அடித்தால் இப்படியான அனுபவங்கள் வந்தே தீரும் என்ற பாடத்தை இது புகட்டியுள்ளது.

தனிப்பட்ட முறையில் சாப்பிட அழைத்தாலும் இனிமேல் கவனமாக இருக்க வேண்டுமென தமது நண்பர்களை எச்சரிக்கின்றார் ஐரோப்பிய நண்பர்.

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# இதயத்தை இழக்கலாமா?

புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் கால் பதித்த நாங்கள் ஓரளவு வசதியான வாழ்க்கையைச் சம்பாதித்துக் கொண்ட அதேவேளை அந்த வாழ்க்கையைப் பெறுவதற்கு ஓய்வொழிச்சலற்ற உடலுழைப்பையும் உடல் உள நலத்தையும் மனஅமைதியையும் விலையாகக் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றோம் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

ஓய்வற்ற உழைப்பு, தொடர்ச்சியான மனஅழுத்தம், வாழ்க்கை முறை மாற்றங்கள், எமது உடற்கூறின் அமைப்புக்கு ஏற்புடையதல்லாத காலநிலை எனப் பல்வேறு காரணிகளால் பொதுவாகத் தென்கிழக்காசியக் குடிவரவாளர்கள் குறிப்பாக நம்மவர்கள் இருதய நோய், சர்க்கரை அல்லது நீரிழிவு நோய், இரத்த அழுத்த நோய், புற்று நோய் போன்ற ஆட்கொல்லி நோய்களால் அதிகமாகப் பாதிப்படைகிறார்கள் என்பதைப் புள்ளி விபரங்கள் உறுதி செய்கின்றன.

வடஅமெரிக்காவில் மக்களின் இறப்பு விகிதத்துக்கு முதன்மைக் காரணமாக இருப்பது மாரடைப்பு (Heart Attack) என அழைக்கப்படுகின்ற இதய நோயாகும். இதன் விகிதம் தென்கிழக்காசியக் குடிவரவாளர்களிடம் இன்னும் அதிகரித்துக் காணப்படுவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். பொதுவாக நடுத்தர வயதினரை அல்லது முதியவர்களைத் தாக்குகின்ற இந்த நோயால் இப்போது இளம் வயதினரும் பாதிக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இந்த உயிர் கொல்லி நோயை ஏற்படுத்த வல்ல காரணிகளில் பலவற்றைக் கட்டுப்படுத்த இயலும் என்பதையும், அதன்மூலம் இந்நோயைத் தவிர்க்கவோ அல்லது தள்ளிப்போடவோ முடியும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அத்துடன் மாரடைப்பு நோய் ஏற்படும் வேளை தோன்றக்கூடிய ஆரம்ப அறிகுறிகள் எவை என்பதையும் அவை ஏற்படும் போது விரைந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதையும் அறிந்திருப்பதன் மூலம் தேவையற்ற உயிரிழப்பைத் தவிர்க்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

மாரடைப்பு (Heart Attack) என்றால் என்ன?

இதயத் தசைக்கு குருதி விநியோகம் செய்யும் முடியுரு நாடிகளில் (coronary arteries) குருதி உறைந்து கட்டிபடும் போது அக்குருதிக் குழாய்களில் திடீரென அடைப்பு ஏற்படுகின்றது. இதனால் இதயத் தசைக்குத் தேவையான குருதி விநியோகம் தடைப்பட்டு மாரடைப்பு ஏற்படுகிறது.

முடியுருநாடிகள் (coronary arteries), இதயத் தசைக்கு குருதியையும், பிராண வாயுவையும் வினியோகிக்கும் இரு குருதிக் குழாய்கள். இக்குழாயின் கிளை ஒன்றிலோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கிளைகளிலோ அடைப்பு ஏற்படும் போது இதயத் தசைக்கு குருதி விநியோகம் தடைப்பட்டு இதயத் தசை காயமடைகிறது. காயமடைந்த இதயத்தசைக்கு 20-40 நிமிடங்களில் குருதி விநியோகம் மீள அளிக்க முடியாது போகும் போது இதயத் தசைக் கலங்கள் நிரந்தரமாக இறந்து விடுகின்றன.

மாரடைப்பு எதனால் ஏற்படுகின்றது?

முடியுரு நாடிக் குழாய்களின் உட்பகுதியில் கொலஸ்ரோல் எனப்படும் கொழுப்பின் படிவுகள் மெல்ல மெல்லப் படிந்து கொள்ளும் போது அக்குருதிக் குழாய்களின் உட்பகுதி ஒடுக்கமாகவும் கடினமாகவும் மாற்றமடைகின்றது. இந்த மாற்றம் அக்குருதிக் குழாய்களினூடாகப் பாயும் குருதியின் அளவைக் குறைப்பதுடன் குருதியைக் கட்டிபடச் செய்து குழாயில் அடைப்பை ஏற்படுத்தவும் காரணமாகின்றது.

அனேகமானோரில் பதின்ம வயதிலிருந்தே குருதிக் குழாய்களில் படிவு ஏற்படுவது படிப்படியாக ஆரம்பிக்கின்றது. ஆனால் குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படக்கூடிய நிலை வருவதற்குப் பல ஆண்டுகள் ஆவதனால் நோய்க்குரிய அறிகுறிகள் நடுத்தர அகவையிலோ முதுமையிலோதான் வெளிப்படுகின்றன.

மாரடைப்பு (Heart Attack), திடீர் இறப்பு (Sudden Death), நெஞ்சுவலி (Angina), அசாதாரண இதயத் துடிப்பு லயம் (Abnormal Cardiac Rhythm), இதயச் செயலிழப்பு (Heart Failure), போன்ற விளைவுகள் முடியுரு நாடிகளில் உண்டாகும் மாற்றங்களினால் ஏற்படலாம். இதயத்தின் நாடிக் குழாய்களில் உள்ள ஒடுக்கத்தினால் இதயத் தசைக்குத் தேவைப்படும் பிராண வாயு குறைவடையும் போது உண்டாகின்ற Angina என்படுகின்ற நெஞ்சுவலி இந்த விளைவுகளில் ஒரு ஆரம்ப நிலை எனக் கருதப்படுகிறது. இந்த நெஞ்சுவலி அனேகமாக ஒருவர் உடலியக்கத்தில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படுகிறது. ஓய்வெடுக்கும் போதோ அல்லது நைட்ரோகிளிசரின் என்ற மருந்தை எடுக்கும் போதோ இந்த வலி நீங்கி விடுகின்றது.

கொலஸ்ரோல் படிவைத் துரிதப்படுத்தும் காரணிகள் எவை?

சிலரில் பரம்பரை மரபணுக்களின் காரணமாக குருதியில் கொலஸ்ரோலின் அளவு அசாதாரணமாகக் கூடிக் காணப்படும். இது தவிர கொழுப்பு, மாச்சத்து அதிக அளவில் உள்ள உணவு வகைகளைத் தொடர்ந்தும் அதிகமாகவும் உட்கொள்ளுதல், சிகரட் புகைக்கும் பழக்கம், நீரிழிவு அல்லது சர்க்கரை நோய் (Diabetes Mellitus), குருதி அழுத்த நோய் (High Blood Pressure), மனஅழுத்தம், உடற்பயிற்சியின்மை, கூடிய உடற்பருமன் (Obesity) ஆகிய காரணிகள் கொலஸ்ரோல் படிவு ஏற்படுவதைத் துரிதப்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் பரம்பரைக் காரணியொன்றைத் தவிர மற்றவை யாவும் ஒன்றில் தவிர்க்கவோ அல்லது கட்டுப்படுத்தக் கூடியதோ என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். பெண்களில், ஈஸ்ரோஜின் (Estrogen) எனப்படும் கானில்சுரப்பி மாதவிடாய் முழுமையாக நின்று போகும் காலம் வரைக்கும் கொழுப்பு படிவு ஏற்படுவதைக் குறைப்பதாகக் கூறப்படுகிறது. எனவே அதுவரை பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதிலிருந்து ஓரளவு பாதுகாப்பு கிடைக்கின்றது எனக் கூறலாம். மாதவிடாய் நின்ற பின்பு பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.

மேற்குறிப்பிட்ட காரணிகள் எவ்வளவு கூடுதலாக ஒருவரில் காணப்படுகின்றதோ அவ்வளவு கூடுதலாகவும் விரைவாகவும் அவருக்கு இதய நோய் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. எனவே ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம், ஒழுங்கான உடற் பயிற்சி, மனஅழுத்தத்துக்கு நிவாரணம் காண்பது, நீரிழிவு இரத்த அழுத்தம் கொலஸ்ரோல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த சிகிச்சை பெறுவது போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் மாரடைப்பைத் தவிர்க்க அல்லது தள்ளிப்போடக் கூடியதாக இருக்கும்.

மாரடைப்புக்கான அறிகுறிகள் யாவை?
நெஞ்சுவலி - மாரடைப்பு ஏற்படும் போது நடுநெஞ்சில் அல்லது மார்பெலும்பின் பின்புறமாக வலி ஏற்படலாம். சிலருக்கு நெஞ்சின் மேல் பாரமொன்றை வைத்து அழுத்துவது போலிருக்கும். வலி சில நிமிடங்களுக்கு மேல் நீடிக்கலாம் அல்லது விட்டு விட்டும் வரலாம். சிலவேளை நெஞ்சிலிருந்து கழுத்து, கைகள், முதுகு போன்ற பகுதிகளுக்கு வலி பரவலாம். சிலருக்கு நெஞ்சுவலி இல்லாமல் கைகள், முதுகு, கழுத்து, தாடை, வயிறு போன்ற ஏதாவது பகுதிகளில் வலி ஏற்படுவது போலவும் உணரப்படக்கூடும்.

(26ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# மனதளவில் அவர் ஒரு வலதுசாரி

திரு. வில்மட் ஏ. பெரோ மிகவும் கண்ணியமான அரசியல்வாதியாக இருந்தார். இடதுசாரிக் கொள்கையுடைய இவரால் அரசியலில் புகழீட்ட முடியவில்லை. சோவியத் ஒன்றியத்திற்கு ஸ்ரீலங்காவின் தூதுவராகக் கடமையாற்றியவர். ஹொரணையில் ஸ்ரீபாளி எனும் தாகூரின் சாந்திநிகேதன் போன்ற கலைக்கூடத்தை நிர்வகித்து வந்தவர். அவரில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. அவரின் கொள்கைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. ஆனால் அவரோடு எனக்கு நேரடித் தொடர்பு இருக்கவில்லை. ஆனால் எமது கல்லூரியில் ஆங்கில ஆசானாகக் கடமையாற்றிய திரு. N.R கந்தையா அவர்களுக்கு இவருடன் தொடர்பு இருந்தது. திரு. கந்தையா அவர்களும் வில்மட் பெரேராவின் மேல் அபரிமிதமான பற்றுடையவராக இருந்தார். உயர்தர மாணவர் மன்றத்தின் இராப்போசன விருந்து எல்லாப் பாடசாலைகளிலும் ஒவ்வொரு ஆண்டு முடிவின் கடைசிப் பகுதியில் நடைபெறுவதுண்டு. எமது கல்லூரியிலும் நீண்டகாலமாக நடைபெற்று வந்தது. பல்கலைக்கழகத்து விடுதிச் சாலைகளில் உணவுச் சாலைகளில் கறண்டியும், முள்ளுக் கறண்டியுமே உணவு உட்கொள்ளுவதற்காக உபயோகப்படுத்தப்பட்டது. எனவே மாணவர்களுக்கு அந்த அனுபவத்தைப் பல்கலைக்கழகம் புகுமுன்னர் ஒருமுறையாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உயர்தர மாணவர் மன்றத்து விருந்துகளிலே கறண்டியும், முள்ளுக் கறண்டியுமே உபயோகிப்பார்கள். உணவு வகையும் மேலைத்தேய உணவாகவே இருக்கும். அனேகமாக யாழ் வாடி வீடு Blue ribbon போன்ற நிறுவனங்களே உணவு வகைகளை வழங்கி வந்தன. சில பாடசாலைகள் தாமாகவே உணவு தயாரித்து வழங்கவும் செய்தன. மகாஜனா கலவன் பாடசாலையாக இருந்தமையாலும் அங்கே மனையியல் துறை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் மைத்துனி திருமதி அம்பிகாபதி மற்றும் திருமதி துரைரத்தினம் போன்ற திறமை மிக்க ஆசிரியைகளைக் கொண்டிருந்ததாலும் உணவு பாடசாலையிலேயே தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரி போன்றவை வாடி வீட்டுச் சமையற்காரர்களின் உதவியோடு தாமே உணவினைச் சமைப்பதும் உண்டு. இங்கே பிரச்சனை, போதிய அளவு கோப்பைகள், கறண்டிகள், முள்ளுக் கறண்டிகள் எந்தப் பாடசாலையிலும் இல்லாமையே. இதனால் கொஞ்சம் வாடி வீட்டில் வாடகைக்கு எடுப்பார்கள். ஏனையவை ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்குவதால் ஈடு செய்யப்பட்டது. நாம் பொதுவாக யாழ் இந்துக் கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து பெறுவதுண்டு. உண்மையைச் சொல்வதானால் மாணவர்கள் பலருக்கு இந்தச் சாப்பாடு வயிற்றின் உள்ளே இறங்கக் கூச்சப்படும். கறண்டியால் உட்கொள்வது இன்னொரு பிரச்சனை. ஆனால் அன்றைய தினம் மாணவ மாணவிகள் சுயாதீனமாகப் பழக முடியும். ஏனைய பாடசாலைப் பிரதிநிதிகளுடன் கலகலப்பாகக் காலத்தைக் கழிக்க முடியும் என்பதால் மாணவ மாணவிகள் இத்தினத்தைப் பெரிதும் வரவேற்பார்கள். உணவைப் பற்றி யார் சிந்திப்பார்கள்.

இவ்விழாக்களிலே பிரமுகர்கள் பிரதம விருந்தினர்களாகவும், பாடசாலை அதிபர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் அழைத்து உரை நிகழ்த்த வைக்கப்படுவார்கள். உரைகள் அனேகமாக வாழ்த்துக்களாகவே அமையும். நாட்டிற்கு வாழ்த்து, பாட-சாலைக்கு வாழ்த்து, மன்றத்திற்கு வாழ்த்து, சகோதர பாடசாலை மன்றங்களுக்கு வாழ்த்து, விருந்தினருக்கு வாழ்த்து என உரைகளும் இவை ஒவ்வொன்றிற்கும் பதிலுரைகளும் நடைபெறும். உரைகள் பொதுவாகவே நகைச்சுவையுடையவையாக அமையும். ஏ.இ. தம்பர் (யாழ் மத்திய கல்லூரி அதிபர்), கதிரைவேற்பிள்ளை (பாராளுமன்ற உறுப்பினர்), என். சபாரத்தினம் (யாழ் இந்து அதிபர்), வி.என் நவரத்தினம் (பாராளுமன்ற உறுப்பினர்), அழகு சுப்பிரமணியம் (மிக்க பிரபல எழுத்தாளர்), பி. நாகலிங்கம் (மன்னார் மேலவை உறுப்பினர்) போன்றோர் நகைச்சுவையாகப் பேசும் ஆற்றல் உடையவர்கள்.

பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராக விளங்கிய திரு சிவபாதசுந்தரம் அவர்களை ஒரு முறை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தோம். அவரை உயர்தர மாணவ மன்றத்திற்கு வாழ்த்து வழங்க வேண்டியிருந்தோம். அவர் தனது உரையில் அந்நிய மோகத்தை பெரிதும் கடிந்துரைத்தார். கோப்பைகளில் கறண்டி, முள்ளுக் கறண்டி உபயோகித்து உணவுண்பதை அவர் கண்டித்து, வாழை இலையில் விருந்துபசாரம் நடத்தினால் என்ன என வினா எழுப்பினார். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே போனது. எந்த ஒரு பாடசாலையும் நான் அறிந்தவரையில் அவரது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. ஆனால் எழுபதுகளின் பிற்பகுதியில் இவ்விருந்துகளிலே மாணவர்கள் உடைகளில் மாத்திரம் தேசியத்தைப் புலப்படுத்தினர். கழுத்துப் பட்டியும் கோட்டும் போட்ட நிலை மாறி சிலர் வேட்டியும் நாசனல் சேட்டும் அணிந்து விருந்துகளுக்கு வர ஆரம்பித்தனர்.

அவ்வருடத்திற்குரிய விருந்தினுக்குப் பிரதம அதிதியாக திரு வில்மட் ஏ.பெரேராவை அழைக்க நான் விரும்பினேன். இதனை ஆசிரியர் கந்தையாவிடம் கூற அவர் பெருமகிழ்ச்சியுடன் அவருக்கு அழைப்புக் கடிதத்தை அனுப்பியிருந்தார். இந்த விருந்து பொதுவாக சனிக்கிழமைகளிலே தான் நடைபெறும். ஆனால் திரு வில்மட் பெரேரா விருந்துக்கு வரச் சம்மதித்த போதிலும் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக் கிழமைதான் தன்னால் வர முடியும் என அறிவித்திருந்தார். அவரை பிரதம விருந்தினராக வைக்க வேண்டும் என்ற பேராவலில் நான் அதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டேன். மறுநாள் வருடாந்தப் பரீட்சை ஆரம்பம். அங்கே தான் நான் பிழை விட்டு விட்டேன். இவ்வளவும் செய்து முடித்த பின்னர் தான் நான் அதிபரிடம் சென்று இதுபற்றிக் கூறினேன். அதிபர் மிக நல்லவர் ஆனால் பொதுவாக இடதுசாரிக் கொள்கையில் அவ்வளவாகப் பிடிப்பில்லாதவர். உள்ளத்தால் அவர் வலதுசாரியாகவே இருந்தார். என்னைப் போல அவர் வில்மட் பெரேராவால் பெரிதும் கவரப்பட்டவராகத் தெரியவில்லை. அவரைக் கலந்துரையாடாமல் நான் இவ்வளவு செய்தது அவருக்கு வெறுப்பைத் தராவிட்டாலும் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியது தெரிந்தது. மறுநாள் பாடசாலையில் பரீட்சை. விருந்து நடைபெறுவது பொன்விழா கட்டிடத்தின் மேல் மாடியில் உள்ள துரையப்பா பிள்ளை மண்டபத்தில். பரீட்சை அங்கேயும் நடைபெறும். ஏறக்குறைய 180 தனி மேசை கதிரைகள் அங்கே ஏற்றி ஒழுங்கில் வைப்பார்கள். விருந்து வைப்பதாயிருந்தால் நீள மேசை கதிரைகள் வைக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை பகல் மேசை கதிரைகளை ஏற்றி விருந்து முடிந்ததும் மேசைகளைக் கீழே இறக்கி 180 தனி மேசைகளை அங்கே ஏற்றி அடுக்க வேண்டும். இது பகீரதப் பிரயத்தனம் என்பது அதிபர் அபிப்பிராயம். எனவே வில்மட் பெரேராவுக்கு விருந்து பிற்போடப்பட்டதாக அறிவிக்குமாறு கேட்டார். இவ்வளவுக்கும் அவரது மகன் ஜெயக்குமார் தான் மன்றத்தின் செயலாளர்.

(26ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுவல் ஜேசுதாசனின் 'வயது பதினாறு' அரங்கேற்றம்

## வரலாறு வரைந்த பெருமைமிகு இலக்கிய விழா






கனடிய சட்டத்தரணியும், சிறந்த கலைஞரும், எழுத்தாளருமான மனுவல் ஜேசுதாசன் அவர்களின் 'வயது பதினாறு' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா, கடந்த மாதம் 6ம் திகதி ஸ்காபரோவில் எழுத்தாளரும் கவிஞருமான திரு. க. நவம் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது. ஆரம்ப உரையை திரு. மதிவாசன் நிகழ்த்தியதையடுத்து, ஜேசுதாசன் அவர்களின் புதல்விகளான அஜித்தா, அனித்தா, அஜந்தா ஆகியோர் முறையே கனடிய தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம் ஆகியவற்றை வழங்கினர். வரவேற்புரையை திருமதி மொனிக்கா ஜேசுதாசன் நிகழ்த்தியதைத் தொடர்ந்து ஆசியுரையை சிவசிறீ ப. விஜயகுமார குருக்களும், வாழ்த்துரைகளை திருவாளர்கள் செல்லையா, இளையபாரதி ஆகியோரும் வழங்கினர். விழாத்தலைவர் நவம் அவர்களை திரு. குயின்ரஸ் துரைசிங்கம் அவர்கள் அறிமுகம் செய்ததையடுத்து நூல் வெளியீடு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமானது. நூலாசிரியரை திரு எஸ். திருச்செல்வம் அறிமுகம் செய்து உரையாற்றினார். ஆய்வுரைகளை ராஜ்மீரா இராசையா, திரு சிவசாமி ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியை வைத்தியகலாநிதி இந்திரன் ஆசீர்வாதம் பெற்று விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். நூலாசிரியர் நன்றியுரையுடன் ஏற்புரையாயும் நிகழ்த்தினார். நூலின் தயாரிப்பிலும் விழாவிலும் முக்கிய பங்காற்றிய எழுத்தாளர் அ. முத்துலிங்கம், அதிபர் பொ. கனகசபாபதி, கவிஞர் வி. கந்தவனம், திரு. கதிர் துரைசிங்கம் ஆகியோர் மேடையில் வைத்து நூலாசிரியரால் சிறப்புச் செய்யப்பட்டனர். பல்துறைகளையும் சேர்ந்த இலக்கிய ஆர்வலர்களால் மண்டபம் முழுமையாக நிரம்பியிருந்த ஒரு வெளியீட்டு இலக்கிய விழா என்ற பெருமையை இவ்வைபவம் பெற்றுக்கொண்டது. (ஒளிப்படங்கள்: கருணா)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Accreditation Assistance Access Centre-AAA Centre ஸ்காபரோவில் புதிய கிளை



வெளிநாடுகளில் பயின்ற துறைஞர்கள், தொழிற் தேர்ச்சியாளர்கள் ஆகியோருக்கு, கனடாவில் அவர்கள் தமது துறைசார் அங்கீகாரத்தைப் பெற்று, வேலை தேடிக் கொள்ளத் தேவையான தகவல்களையும் தகைமைப் பேற்றுத் திட்டமிடல் ஆலோசனை களையும், உதவிகளையும் இலவசமாக இந்த நிலையம் வழங்கி வருகிறது.

2100 எல்ஸ்மெயர் வீதியிலுள்ள 120ம் இலக்க அறையில் அமைந்துள்ள Accreditation Assistance Access Centre என்ற பெயருடனான இந்த நிலையத்தை, ஒன்ராறியோ மாகாண அரசின் ஸ்காபரோ மத்திய தொகுதி உறுப்பினர் திரு. பிறட் டியூகிட் மே 2ம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

"யோர்க் பிராந்தியத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த இந்த நிலையம், ரொறன்ரோ பெரும்பாகத்தில் சேவையாற்ற அரசாங்கம் தற்போது அனுமதி வழங்கி இருக்கின்றது. இதன் மூலமாக மேலும் பெருந்தொகையான புதிய குடிவரவாளர்கள் பயனடைய இருக்கின்றனர். விரைவில் பெரியதொரு கட்டடத்தில் இடம்பெயர்ந்து, மிகப்பெரிய அளவில் இந்நிலையம் சேவையாற்றும்" என்று திறப்புவிழா வைபவத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. டியூகிட் குறிப்பிட்டார். பிரபல சட்டத்தரணி யசோ சின்னத்துரை அவர்கள் வைபவத்தில் கலந்து கொண்டோர் சார்பில் உரையாற்றினார். "கனடாவுக்கு நான் வந்த காலத்தில் இவ்வாறான சேவை கிடைத்திருக்குமேயாயின், நான் அனுபவித்த பல சிரமங்களைத் தவிர்க்க அது உதவியிருக்கும். இந்நிறுவனத்தின் சேவை மேலும் விரிவாக்கப்பட்டு பாரிய அளவில் மக்களுக்குப் பயன்பட வேண்டும்" என அவர் தமது உரையில் தெரிவித்தார். பல்வேறு நிறுவனங்கள், சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில், தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிரதானிகள் ஆகியோர் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர்.

பிரபல எழுத்தாளரும் கவிஞருமான க. நவம் இந்நிலையத்தில் ஒரு அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.




# Visible minorities now 17% of Toronto police

## chief Bill Blair says at ethnic media meet

Gone are the days when the Metro Toronto police force had fewer than 3 per cent of visible minorities, leaving crime in the ethnic communities unsolved and serving newcomers to Canada far less than the majority communities.

Today, says police chief Bill Blair, "Our number for visible minority police officers is close to 17 per cent… and we have officers representing just about every [minority] community and language group… Believe me it has helped us solve a lot of crimes because they understand the language, the culture, the little nuances that are important for police work."

The chief was speaking to CEMA at a gathering last month (Feb. 6, 2007) where he and several of his officers met members of the ethnic community in the Officer's Lounge at police headquarters. More than 30 ethnic journalists, photographers and videographers attended the informal gathering where they chatted with officers over sandwiches and soft drinks.

CEMA was at the event in full force — its members made up a large portion of those attending. The chief told CEMA that in fact in the last graduating class of new recruits the police had more than met their targets for both visible minorities and women — 50 per cent of the graduating class comprised visible minorities and women.

"Visible minorities are also represented on every specialized unit in the force," he said. "It's not just getting them in, it is using them in every specialized unit."   Courtesy: CEMA Website.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுதா'வின் 'மொன்றியல் தமிழ் முகவரி'
## சமூக வளர்ச்சியின் ஓர் அடையாளம்





மொன்றியலிலுள்ள பெரும்பாலான தமிழர் வர்த்தக நிலையங்களின் தகவல்களையும், விபரங்களையும் தாங்கிய அற்புத வெளியீடாக 'மொன்றியல் தமிழ் முகவரி' மலர்ந்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளாக மொன்றியலில் 'இருசு' வாராந்தப் பத்திரிகையை வெளியிட்டு வரும் சுதா (சுதாகரன் பத்மநாதன்) அவர்களின் அயராத முயற்சியே முகவரியின் பிரசவம். 8.25/5.25 அளவில், 230க்கும் அதிகமான பக்கங்களில், கவர்ச்சியான வர்ணக் கலவையிலான அட்டையுடன் வந்துள்ள 'முகவரி' அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. இறுதியிலுள்ள பதினாறு பக்கங்கள் பலவேறு தகவல்களை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடப்பட வேண்டிய அம்சம்.



மொன்றியல் துர்க்காபதி துர்க்கை அம்மன் கோயிலில் கடந்த மாதம் 1ஆம் திகதி இதன் வெளியீட்டு நிகழ்வு எளிமையாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றது. 'வீணைமைந்தன்' திரு. கே.ரி. சண்முகராசாவின் வெளியீட்டுரையை அடுத்து சிவசிறீ வெங்கடேசுவர சர்மா முதல் பிரதியினை 'முகவரி' கையேட்டினை தனது இதயத்தில் சுமந்து இறைபதமெய்திய 'மனித நேயப்பண்பாளர்' உயர்திரு. இ. பந்மநாதன் சார்பாக அவரின் மூத்த புதல்வர் திரு. கரிகரன் பத்மநாதனிடம் வழங்கினார். அதனைத்தொடர்ந்து 'ஆரணி தங்கமாளிகை' திரு. இ. நடராஜா, 'லக்கி பான்ஷி' திரு. ஆனந்தன், 'எக்ஸ்சோற்றிக் மளிகை ஸ்தாபனம்' திரு. ஏகாம்பரநாதன் 'A-Grade கல்விக்கூடம்' திருமதி. பாமதி லிங்கராசா ஆகியோரும் மேலும் பல பிரமுகர்களும், ஆலயத்திற்கு வருகை தந்திருந்த அன்பர்களும் பெற்றுக்கொண்டனர்.

முகவரி வெளியீட்டகத்தினர் 'தமிழ் முகவரி' எனும் பெயரோடு மொன்றியல் வாழ் தமிழ் மக்களது வணிக முகவரிகளுடன் அன்றாட அத்தியவசியமான தொடர்பு இலக்கங்கள் மற்றும் தகவல்களுடன் அழகாகவும் நேர்த்தியாகவும் தயாரித்து வெளியிட்டுள்ளனர். முகப்பில், மொன்றியல் மாநகரை வரையுரு கலவையில் பொதித்து மும்மொழிகளிலும் தலைப்பிட்டு, உள்ளே பல வர்ணப் பக்கங்கள் இருவர்ணப் பக்கங்கள் என 224 பக்கங்களுடன் சீராக செம்மைப்படுத்தி மலராக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தசாப்த காலமாக தமிழ் வெளியீட்டுலகத்துக்கு 'பாமினி', 'ஈழம்', 'நல்லூர்' 'றிங்கோ' என இன்னும் பல நூற்றுக் கணக்கான தமிழ் எழுத்துருக்களை கணினிக்கென வடிவமைத்து அறிமுகப்படுத்திய 'கரன் கிறாப்' மொன்றியல்-ரொறோன்ரோ, நிறுவனத்தாரின் வடிவமைப்பில் இவ்வெளியீடு அச்சமைத்து உருவமைக்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் மொன்றியலிலுள்ள அனைத்து தமிழ் வர்த்தக பெயர்களையும் தொலைபேசி இலக்கங்களை யும் உள்ளடக்கிய சிறிய துணை கையேடும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இவ் வெளியீட்டின் தரம் புலம்பெயர் தமிழரின் தடம் இம் மண்ணில் ஆழப் பதிந்துள்ளமையை காட்டி நிற்கின்றது எனலாம். மொத்தத்தில் இது ஒரு நல்ல கூட்டு முயற்சி.

**ஒளிப்படங்கள்: எம். சிறிதரன் (கண்ணன்)**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர்களின் மே மாதச் ச
# TVi-CMR கொண்டாட்டம் - South






கனடியத் தமிழர்களின் முன்னணி ஊடகங்களாகத் திகழும் ரிவிஐ தமிழ்த் தொலைக்காட்சி, மற்றும் சி.எம்.ஆர் பல்கலாசார வானொலி ஆகியவை இ
விழா' கடந்த மாதம் 19ம் 20ம் திகதிகளில் ரொறன்ரோ இன்டர்நாஷனல் மண்டபத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்று மகிழ்ந்த சிற
நிகழ்ச்சிகளுடன், அறிவு வளர்ச்சிக்கான நிகழ்வுகளும் இணைக்கப்பட்டு, இரண்டு அரங்குகளில் தொடர்ச்சியாக மேடையேற்றம் கண்டது குறிப்பிடப்பட
பல நிகழ்ச்சிகளை அரங்கேற்றி ரசிகர்களை மகிழ்வித்தனர். இரண்டாம் நாள் நண்பகலுக்குப் பின்னர் வருகை தந்தோர் எண்ணிக்கை பல மடங்காகி ச
ஒழுங்கமைப்பினால் அனைத்தும் நேர்த்தியாகவும், பார்வையாளர் பாராட்டும் வகையிலும் நிகழ்ந்தேறின. கனடியத் தமிழர்களின் மே மாதத்துச் சிறப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு உற்சவம்

# ...h Asian Festival













...வ இணைந்து வழங்கிய மூன்றாவது ஆண்டுக் 'கொண்டாட்டம் - தெற்காசிய பல்கலாசார ... சிறப்பு வைபவமாக நடைபெற்றது. சகல வயதினரையும் கவரும் வகையிலான கலை ...ப்படவேண்டியது. ரிவிஐ, சி.எம்.ஆர் ஊடகங்களில் புகழ்பெற்ற கலைத்துறைப் பிரபலங்கள் ...கி சனசமுத்திரமாக மண்டபம் வழிந்தோடிய நிலையிலும், விழாக் குழுவினரின் துரிதமான ...றப்பு உற்சவமாக 'கொண்டாட்டம்' வரவேற்பும் அங்கீகாரமும் பெற்றுவிட்டது.





தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## இதய நன்றி!

தமிழர் தகவல் பதின்ம மலர் வெளியீடு மற்றும் வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம் ஆகியவை தொடர்பான செய்திகளைத் தோழன்புள்ள நட்புடன் பிரசுரித்தும், ஒலி-ஒளி பரப்பியும் மக்கள் மன்றுக்கு எடுத்துச் சென்ற பின்வரும் சகோதர ஊடக நிறுவனங்களுக்குத் 'தமிழர் தகவல்' வெளியீட்டகமும் அகிலன் அசோஷியேற்ஸ் நிறுவனமும் இணைந்து இதயம் குவித்து நன்றியினைத் தெரிவிக்கின்றன.

ஈழமுரசு, கனடா
முழக்கம், கனடா
சுதந்திரன், கனடா
தமிழர் செந்தாமரை, கனடா
Tamil Mirror, கனடா
tvi தொலைக்காட்சி, கனடா
tamil one தொலைக்காட்சி, கனடா
ATN தொலைக்காட்சி, கனடா
OMNI ஆரம் தொலைக்காட்சி, கனடா
OMNI South Asian தொலைக்காட்சி, கனடா
ttn தொலைக்காட்சி, பிரான்ஸ்
கனடிய தமிழ் வானொலி (CTR),
CMR vewneலி, கனடா
IBC சர்வதேச வானொலி, இலண்டன்
தினமலர், தமிழ்நாடு
'இருசு' பத்திரிகை, மொன்றியல்
கொழும்பு தினக்குரல் பத்திரிகை
யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகை
ஜேர்மனி வெற்றிமணி
இலண்டன் சுடரொளி
புதினம்
www.kerudavil.com இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனடி இணைந்தார்



## திரு. முருகேசு காங்கேசு

இலங்கையில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய இலங்கை உள்ளூராட்சிச் சேவை ஆணையாளர் (Commissioner, Local Government Service) திரு. முருகேசு காங்கேசு அவர்கள் 22.05.2007ல் இறைவனடி இணைந்தார். இவர் இளைப்பாறிய ஆசிரியை இராசமணியம்மாவின் (பேபி அக்கா) ஆருயிர்க் கணவரும், கனடாவை வதிவிடமாகக் கொண்ட சபேசன் (Sabesan's Choice நிறுவன அதிபர்), றஞ்சிதமலர் சிங்காரவேல், ஞானச்சந்திரன் ஆகியோரின் பாசமுள்ள தகப்பனாரும், சத்தியதேவி, சிங்காரவேல், நளாயினி ஆகியோரின் நேசமான மாமாவும், நிக், அன்ட்றூ, ஜெனி, றஞ்சித், ரகுநாத், கிரிஷ், அனோஜ் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு 27.05.2007ல் அவரது இல்லத்தில் சைவசமயாசார முறைப்படி நடைபெற்று, பூதவுடல் அன்றைய தினம் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்: சபேசன்: 416 605 1990
ஞானச்சந்திரன்: 905 696 8645

## குடும்பங்கள் குடும்பங்களைக் கட்டியெழுப்புதல்

## ஆலோசனைக் கூட்டம்

குடும்பப் பிரச்சனைகளால் தமிழ்க் குடும்பங்கள் மத்தியில் ஏற்படுகின்ற மன அழுத்தங்களும் மனச் சிதைவுகளும், பிரிவுகளும், பிரிவினால் ஏற்படும் தனிமையும், இவற்றினால் குழந்தைகளின் மனதில் ஏற்படும் தாக்கங்களும், இவற்றின் காரணங்களும், இவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய வழிவகைளும் பற்றி ஆராய்ந்து வழிமுறைகளைக் காண்பதற்கான முக்கிய கலந்துரையாடலொன்று 'குடும்பங்கள் குடும்பங்களைக் கட்டயெழுப்புதல்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது. இந்த மாதம் ஒன்பதாம் திகதி பிற்பகல் நான்கு மணி முதல் ஏழு மணி வரை, ரொறன்ரோ 2723 சென். கிளயர் விதியிலுள்ள (St. Clair/Oconnor) சென். கொலம்பியா தேவாலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் அழைக்கப்படுகின்றனர். தொடர்பு இலக்கம்: 416 267 9131


யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

REAL ESTATE LAW
RESIDENTIAL &
COMMERCIAL
BUSINESS LAW

**Tel: 416 265 3456** Fax: 416 265-2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

பொது இடங்களில் அமைந்துள்ள Bell தொலைபேசிகளை உள்ளூர் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கான கட்டணத்தை 50 சதமாக அதிகரிக்க ஆலோசிக்கப்படுகின்றது. தற்போது இக்கட்டணம் 25 சதம்.

கனடிய நாட்டில் குடியிருப்பதற்குத் தகுதியில்லாதவர்கள் எனக் கருதப்படுபவர்களை அப்புறப்படுத்துவதற்கான புதிய சட்டமொன்றை உருவாக்கும் முயற்சியில் கனடிய குடிவரவு அமைச்சு ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் டயான் பின்லெ அறிவித்துள்ளார்.

ரொறன்ரோவில் குடியிருப்புகளுக்கு 'பைப்' வழியாக வரும் தண்ணீரில் உலோகத் தன்மை செறிந்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதால், பூரணமான பரிசோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் PR Card எனப்படும் நிரந்தரக் குடியிருப்பாளர் அட்டையைப் பெற்றவர்கள், புதிய அட்டைக்கு விண்ணப்பிக்கும் காலம் வந்துள்ளது. இந்த அட்டை ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

ரொறன்ரோ வீதிகளில் கட்டணம் செலுத்தாமல் வாகனங்களை நிறுத்துபவர்கள், டிக்கட் வைப்பவர் அதனை எழுதிக் கொண்டிருக்கையில் வாகனத்தை அவசரமாக எடுத்துக்கொண்டு ஓடினால், அந்த டிக்கட் வீட்டு முகவரிக்குத் தபாலில் வரும்.

உலகின் முன்னணி நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உட்பட்ட பத்து நாடுகளில், கனடிய இளையோர்களே கடுமையான உழைப்பாளிகள் என்று கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது. அதேசமயம் கனடிய இளையோர் மனஉளைச்சலுக்கு ஆளாவதும் அதிகரித்துள்ளதாம்.

எரிபொருள் விலை புயல் வேகத்தில் அதிகரிப்பதால், மின்சக்தியில் இயங்கும் மகிழுந்துகளை (Hybrid cars) ரொறன்ரோவில் அறிமுகம் செய்ய ரொறன்ரோ நகர முதல்வர் டேவிட் மில்லர் நடவடிக்கை எடுத்துள்ளார். வீட்டுச் சுவர்களிலுள்ள மின்வழங்கு 'சொக்கற்' வழியாக இந்த வாகனங்கள் இயங்குவதற்கு ஆரம்பிக்க (start) முடியும்.

அமெரிக்க 9/11 தாக்குதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தடுப்பு என்னும் பெயரிலான செயற்பாடுகள், மனித உரிமைகளைக் குழி தோண்டிப் புதைத்து வருகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மாதம் வெளியிட்ட வருடாந்த அறிக்கையில் சுட்டியுள்ளது.

ரொறன்ரோவிலுள்ள பொது வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணத்தை ஐம்பது சதத்தினால் அதிகரிக்க முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, இரண்டு டாலர் கட்டணமாக இருக்கும் இடங்கள் இரண்டரை டாலராக அதிகரிக்கும்.

கனடாவில் குடியேறும் குடிவரவாளர்கள், அமெரிக்காவின் குடிவரவாளர்களை விட அதிகூடிய கல்வித் தகைமை உடையவர்கள் என்று கனடிய அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. கனடிய குடிவரவாளர்களில் பத்துக்கு நான்கு பேர் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களாக உள்ளனர். ஆனால், அமெரிக்காவில் குடியேறுபவர்களில் பத்துக்கு ஒருவரே இவ்வாறான தகைமை உடையவர்களென்று கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாரதூரமான குற்றச்செயல்களைத் துப்புத் துலக்குவதில் பீல் (மிசிசாகா, பிராம்டன் பகுதி) பொலிஸ் பிரிவு முதலிடத்திலுள்ளது. இங்கு 81 வீதமான குற்றச்செயல்களும் துப்புத்துலக்கப்படுகின்றன. இரண்டாவது இடத்தில் யோர்க் பிரதேச பொலிஸாரும், மூன்றாவது இடத்தில் டர்ஹாம், ஹோல்டன் பொலிசாரும் உள்ளனர். ரொறன்ரோ பொலிசார் இதற்கும் கீழேதான் உள்ளனர்.

HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## வர்த்தகச் சோலை 2007

தமிழன் வழிகாட்டி செந்தியின் இவ்வருடத்துக்கான 'வர்த்தகச் சோலை' கடந்த மாதம் 12ம் 13ம் திகதிகளில் இடம்பெற்றது. வழக்கம் போல மண்டபம் முழுவதும் வர்த்தகச் சாவடிகள் நிரம்பியிருந்தன. பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் ஏற்பாடாகியிருந்தன. இரண்டாம் நாள் விழாவில், ஸ்காபரோ ஏஜின்கோர்ட் தொகுதி எம். பி ஜிம் கரிஜியானிஸ் அதிதியாகப் பங்கேற்று செந்தி செல்லையாவின் சேவையைச் சிறப்புச் செய்து பாராட்டுப் பட்டயம் வழங்கி மதிப்பளித்தார்.









FUTURE WAY
FINANCIAL SERVICE INC.

# Mortgage & Re-Financing

- Mortgage Insurance ஈட்டுக்கடன் காப்புறுதி
- Permanent Life Insurance நிரந்தர ஆயுட்காப்புறுதி (10, 20 வருடத்தில் கட்டி முடிக்கலாம்)
- Critical Illness கடுமையான நோய் வருமுன் காக்கும் காப்புறுதி (வாழும் போதே காப்புறுதியின் பயனைப் பெறலாம்)
- Non Medical Life Insurance வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி
- Travel Insurance பிரயாணக் காப்புறுதி
- R.R.S.P. ஓய்வூதிய சேமிப்புத் திட்டம்
- R.E.S.P. சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் (அரச மானியம் 20%–40% + எமது நிறுவனம் வழங்கும் 15% மேலதிக கொடுப்பனவு)

பல்வேறு முன்னணி நிறுவனங்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் குடும்ப வருமானத்திற்கேற்ப காப்புறுதி செய்து தரப்படும்
www.bank24.ca

**Compare Our Guaranteed 10 year Renewable Rates for your self**

| Age | 100,000 | | 250,000 | | 500,000 | |
|---|---|---|---|---|---|---|
| | Male | Femal | Male | Female | Male | Female |
| 30 | 11.16 | 9.00 | 18.00 | 13.28 | 27.00 | 18.00 |
| 35 | 11.16 | 9.81 | 19.35 | 15.53 | 28.35 | 22.05 |
| 40 | 13.86 | 11.70 | 23.40 | 19.35 | 39.50 | 28.35 |
| 45 | 17.46 | 13.95 | 33.53 | 24.53 | 58.05 | 39.60 |
| 50 | 23.22 | 18.45 | 46.58 | 35.33 | 86.50 | 59.85 |

Source: Life guide January 2007

Non smoker Monthly Rates. Rates may vary depending on health

7100 Woodbine Ave., Suite 101, Markham, ON, L3R 5J2 (Steele and Woodbine)

**Direct: 416.803.6500**

Please Note: Advertising companies no soliciting

**Are you tired of paying too much for your insurance?**

RBC INDUSTRIAL ALLIANCE Canada Life



Investment, insurance & Financial Advisor

**Haran Thava**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*
எஸ். பத்மநாதனின் தொடர்
13

# சிட்டுக்களே வாருங்கள்!

ஒவ்வொரு மாதமும் உங்களின் சிந்தனைக்கு மேலும் மேலும் மெருகூட்டும் விதத்தில் புதிய கருத்துக்களை வழங்குவதில் மாமாவுக்கு மிகவும் மகிழ்ச்சியே. அந்த வகையில் இந்தத் தடவை உங்களுக்கு வழங்கும் புதிய கருத்து முன்மாதிரியானவர்களை தெரிவு செய்தல் (Choosing role models) பற்றியதாகும்.

தினசரி நிகழ்வுகளை பாருங்கள். பறவைகள், பிராணிகள், கடலில் உள்ள மீன்கள் கூட ஒன்றன்பின் ஒன்றாக தமது தாய்க்கு பின்னால் செல்வதனை அவதானித்திருப்பீர்கள். குறிப்பாக வாத்துக்கள், தாராக்கள், கோழிக் குஞ்சுகள் போன்றனவெல்லாம் அழகாக அணிவகுத்து செல்லும் காட்சியே தனித்துவமானவை. தங்களுக்கு முன்மாதிரியாக ஒன்றின் பின்னால் ஒன்றாக செல்கின்றன. இதனை எமது சிட்டுக்களான நீங்களும் நல்ல முன்மாதிரியை பின்பற்றலாம் என்பதே கருத்தாகிறது.

உங்களால் நேசிக்கப்படும் ஒருவர், வியக்கப்படும் ஒருவர் அதிசயமூட்டும் ஒருவர் யார்? என்பதனை முதலில் பாருங்கள். தினசரி வாழ்வில் அவர்கள் வந்து கொண்டிருப்பார்கள். பெற்றோர், ஆசிரியர், சகோதரங்கள், குழுத்தலைவர், நண்பர் அல்லது பிரசித்தமான ஒருவர் என்போருள் ஒருவரே உங்கள் முன்மாதிரியாகின்றார். அவர்போல் உங்களையும் மாற்றிக் கொண்டால் முழு வாழ்வும் சிறக்கிறது.

உங்கள் அபிவிருத்தியில் இவ்வாறான முன்மாதிரியானவர்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். உங்கள் தகப்பனாரின் நகைச்சுவை உணர்வு, உங்கள் சகோதரர்களின் விளையாட்டு திறன், சிறந்த பாடகரின் நடை உடை பாவனை என்றெல்லாம் உங்களை பல அம்சங்கள் கவரக் கூடும். இவற்றில் மனம் பறிகொடுத்து உங்களையும் அவ்வாறு ஆக்கிக் கொள்வீர்கள்.

யாரைப் போல் வரவேண்டுமென்ற தீர்மானத்தை எடுப்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

எப்படி என்றாலும் நீங்கள் நீங்களாக வளர்வதற்கு சில முக்கிய அம்சங்கள் தேவையாகின்றன. உங்களுடன் பல நண்பர்கள் பழகுவார்கள். இதில் மிகவும் அவதானம் தேவையாகும். உங்கள் தீர்மானங்களைக் கூட மாற்றும் தன்மை அவர்களுக்கு உண்டு.

உங்கள் சிந்தனையிலும் நடவடிக்கையிலும் அவர்கள் செல்வாக்கு செலுத்துவார்கள். புகைப் பிடித்தல், போதைவஸ்து பாவனை, மது அருந்துதல், உடைகளை அணிதல் என்பவற்றில் உங்கள் நண்பர் போல் வர முயற்சிப்பீர்கள். இந்த நண்பர்களின் செல்வாக்கு (Peer influences) மிகவும் முக்கியமானதாகும்.

சிட்டுக்களே! முடிந்த அளவு நல்ல நண்பர்களை தெரிவு செய்யுங்கள். உங்கள் விழுமியம், நம்பிக்கை, தீர்மானம் என்பவற்றில் மிகவும் அவதானமாக இருங்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**





# UNEMPLOYED?

**Are You Receiving EI...?**
**Contact Us for HRDC Funding Details**

*Employers need skilled people in*

- Early Childcare Assistant (ECA)
- Computerized Accounting
- A+ (Computer Assembly & Repair)
- Network Engineering
- Personal Support Worker (PSW)
- Business Administration
- QA/Software Tester

**job** ready in 3 -6 months

**Kennedy & Sheppard**
(North East Corner)
301 - 2347 Kennedy Road
Tel: **416-321-9911**

**Computek of College**
**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy & Eglinton**
(Above Public Library)
248 - 2390 Eglinton Ave. E.
Tel: **416-285-9941**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி 10

# வெள்ளிப் பணம் - டாலர்

கடந்த வெள்ளிப்பண கட்டுரைத் தொடரில் உயர்கல்வி பெறும் மாணவர்களின் வருமானவரி பற்றி சுருக்கமாக பார்த்தோம். இம்முறை இன்றும் 10 அல்லது 15 வருடங்களில் உயர்கல்வியை பெறப்போகும் மாணவ சமூகத்துக்கு பெற்றோர்கள் எவ்வாறு பொருளாதார ரீதியாக உதவ முடியும், அரசாங்கம் எவ்வாறான ஊக்குவிப்புக்களை மேற்கொள்கிறது என்பதனை சுருக்கமாக பார்ப்போம்.

உயர்கல்விக்கான கட்டணங்கள் (Tuition Fee) வருடாவருடம் 7% இற்கு குறையாமல் அதிகரித்துச் செல்கின்றது. இன்னும் 10 வருடங்களில் இந்த அதிகரிப்பு தற்பொழுதுள்ள தொகையினைவிட இரண்டு மடங்காக இருக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலை வருகின்ற போது உயர்கல்வி என்கின்ற இந்த கனி எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்குமா என்ற கேள்வி எழுகின்றது.

குறிப்பாக வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இது எட்டாத நெல்லிக்கனியாக அமையக்கூடாது என்ற நோக்கத்தின் வெளிப்பாடாக இத் தொடர் அமைகின்றது.

இப்படியான சூழ்நிலையில் நடுத்தர வருமானம் உள்ளவர்களும் குறைந்த வருமானம் உள்ளவர்களும் என்ன ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்கின்ற வினா எழுகின்றது.

இதற்குத்தான் கனடா அரசாங்கம் குழந்தைகளுக்கான கல்விச் சேமிப்புத் திட்டத்தினை ஊக்குவிப்பதற்கு பல்வேறு வகையான ஊக்குவிப்புகளை மேற்கொள்கின்றது.


(1). சேமிப்பில் இடப்படும் பணம் உழைக்கும் வட்டிக்கு வரிவிலக்கு.
(2) சேமிப்பில் இடப்படும் பணத்துக்கு ஊக்குவிப்பாளர் மானியம் (Grant) வழங்குகின்றது. இது பல்வகையான வருமான நிலையில் உள்ளவர்களுக்கு வேறுபட்டு அமைகின்றது.
(3) 2004 ஆண்டுக்கு பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு மேலதிகமான ஊக்குவிப்பு பணம் வழங்கப்படுகின்றது. இதில் குடும்பத்தின் வருமானம் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.
(4) அல்பேட்டா மாகாணத்தில் வசிப்பவர்களுக்கு மாகாண அரசும் மானியம் வழங்குகின்றது.

இந்த மானியங்கள் பற்றி விரிவாக எதிர்வரும் இதழ்களில் பார்ப்போம். பிள்ளைகளின் எதிர்கால கல்வி எமது குறிக்கோள் எனக் கூறும் நாம் இதனைப் பற்றிச் சரியாக தெரிந்து புரிந்து சிந்தித்து செயல்பட வேண்டும்.

சரி இதனை வாசிக்கும் போது நன்றாகத்தான் இருக்கின்றது. இதற்கான பணத்தினை எப்படி சேமிப்பது. வரவும் செலவும் சரியாகப் போகின்றதே என ஒரு கேள்வி எழுகின்றது. குழந்தைக்கான Child Tax Benefit இனை பல பெற்றோர்கள் இந்த கல்விச் சேமிப்புத் திட்டத்துக்கு திசை திருப்பி விட்டுள்ளார்கள்.


ஒரு நண்பர் என்னிடம் கூறினார் 1990ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் இப்படியான கொடுப்பனவுகள் இல்லாமல் இருந்த பொழுதும் செலவுகளை கட்டுப்படுத்தி வாழ்ந்தோம். தற்பொழுது மானியத்தின் தொகை அதிகரிக்கின்ற பொழுதும் இளம் பெற்றோர்களால் ஏன் சேமிப்புக்களை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது என்றார்.

எது எவ்வாறாக இருந்த பொழுதும் கல்விச் சேமிப்புத் திட்டம் எதிர்கால தலைமுறைக்கான சிறந்த முதலீடு என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என கூறி அடுத்த இதழில் மானியங்கள் (Grant) பற்றி விரிவாக பார்ப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Jude**

**Anthonypillai LL.B. (Canada)**

Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**

கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
**416 332 8547**

**தொலைநகல்**
**416 332 8379**

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5


## மருந்துகளின் தவறான பாவனை..

எனக்கோ கையறாநிலை. வில்மட் பெரேராவை விட மனம் வரவில்லை. மன்றத்துச் செயற்குழுவும் எனக்கு நம்பிக்கை ஊட்டியது. நான் இதனைச் சவாலாக ஏற்றேன். உங்களுக்கு நான் திங்கள் காலை பரீட்சை நடத்துவதற்கு ஏற்ற வண்ணம் துரையப்பா பிள்ளை மண்டபத்தைத் தருவேன் என உறுதி அளித்தேன். உண்மையில் அன்று இரவு மாணவர்கள் நினைத்தால் எதனையும் சாதிக்கும் திறன் உடையவர்கள் என்பதைக் கண்ணாரக் கண்டேன். விருந்து முடிந்த ஒரு இரண்டு மணித்தியாலத்திலே விருந்து மண்டபம் பரீட்சை மண்டபமாக மாறிய அற்புதத்தைக் கண்ணாரக் கண்டு திகைத்தேன். அதிபர் மறுநாள் இந்த மாயவித்தையை மனதார பாராட்டினார்.

சனி ஞாயிறு நாட்களில் நான் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக காலை நேரங்களில் விசேட வகுப்புகள் நடத்துவது வழக்கம். அதிபர் அவர்கள் அதிகமாகச் சனிக்கிழமை நாட்களிலே பாட-சாலை அலுவலகம் வருவார். ஒரு நாள் வகுப்பில் கற்பித்துக் கொண்டிருந்த என்னை அலுவலகத்திற்கு அழைத்தார். சென்றேன் - அவர் முகத்தில் புன்முறுவல். ஏதோ சொல்லவுள்ளார் எனத் தெரிந்தது. உங்களுக்கு "ராஜ் நகைச்சுவை மன்றம்" அச்சுவேலி இராஜரத்தினத்தைத் தெரியும் தானே எனத் தொடங்கினார். 'சக்கடத்தார் புகழ்' இராஜ் தானே தெரியும் என்றேன். 'அவர் சென்ற கிழமை இங்கு வந்திருந்தார் எமது துரையப்பா மண்டபத்தைப் பார்த்துப் பிரமித்து, வேறு பாடசாலைகளில் இப்படியான ஒரு மண்டபத்தினைத் தான் காணவில்லை எனவும் இங்கு ஒரு நாடகம் போட தான் ஆசைப்படுவதாகவும் கூறினார்'. நான் அதற்கு 'என்ன போடலாம்' என்று கேட்டேன். 'எமது ஆலயத்தின் முற்புறத்தில் உயரமான இரும்பு கிறில்கேற் போட்டால் நல்லாயிருக்கும். அதற்காக ஒரு நிதி சேகரிக்க நாடகம் ஒன்றினைப் போடுவோமா' என்றார். 'அதற்கு எவ்வளவு பணம் தேவை' என வினவினேன். 'ஒரு ஐயாயிரம் ரூபா வரையில் தேவைப்படும்' என்றார். 'இதற்காக ஒரு நாடகம் போட வேண்டுமா? அதற்குத் தேவையான பணத்தினை நான் பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்து தருகிறேன். எவ்வித பிரச்சினையுமின்றி முடித்துவிடலாம்' என்றேன். அவருக்குச் சப்பென்று போய்விட்டது. 'அப்போ நான் அவருக்கு வாக்குக் கொடுத்து விட்டேனே' என்றார். 'உங்களுக்கு வேண்டிய பணத்தை தரலாம் எனக் கூறினேனே அன்றி நாடகம் போட வேண்டாம் எனக் கூறவில்லையே' என்றேன். 'என்ன சொல்கிறீர்கள்' என்றார். (அடுத்த இதழில் தொடரும்)

## இதயத்தை இழக்கலாமா...

மூச்சுக் கஷ்டம் - சிலருக்கு நெஞ்சுவலியுடனோ அல்லது நெஞ்சுவலி இல்லாமலோ மூச்சுக் கஷ்டம் ஏற்படக்கூடும். சிலரில் குமட்டல், வாந்தி, குளிர்ந்து விறைத்தல், தலைச்சுற்று போன்ற இதர அறிகுறிகள் நெஞ்சுவலியுடன் சேர்ந்தோ அல்லது வலியின்றியோ ஏற்படலாம்.

**விரைந்து செயலாற்றுங்கள்-** உங்களுக்கோ அல்லது உங்களுடன் கூட உள்ள ஒருவருக்கோ மேற்குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் தோன்றும் பொழுது சிறிதும் தாமதிக்கக் கூடாது. உடனே 9-1-1 ஐ அழையுங்கள். உடனே மருத்துவமனைக்கு விரையுங்கள். ஏனெனில் மாரடைப்பு ஏற்பட்டால் ஒவ்வொரு விநாடியும் ஏற்படும் தாமதம் உயிராபத்துக்கான அழைப்பாக இருக்கும். தற்போது புதிய மருந்துகளின் பாவனையாலும், புதிய சிகிச்சை முறைகளாலும் மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிகள் பயனடையும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. மாரடைப்பு ஏற்பட்டு எவ்வளவு விரைவாக இந்த மருந்துகளோ சிகிச்சையோ கிடைக்கிறதோ அவ்வளவு விரைவாக நிவாரணம் கிடைக்க வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே தாமதம் வேண்டாம் உடனே உதவியை நாடுங்கள்.

அவசரகால மருத்துவ சேவையை (Emergency Medical Services) அழைக்க வேண்டியது ஏன்? 9-1-1 ஐ அழைப்பதன் மூலம் உயிர் காக்கும் சிகிச்சையினை உடனே பெற்றுக் கொள்ளும் வழி கிடைக்கிறது. அத்துடன் அவசர மருத்துவ சேவை அதிகாரிகள் உங்கள் இடத்தை அடைந்தவுடன் சில அவசர சிகிச்சைகளை அவர்களால் உடனடியாகவே ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் இதயத் துடிப்பு நின்று போகும் நிலை ஏற்படும் வேளையில் கூட இதயத் துடிப்பை மீளப்பெறும் வகையில் சிகிச்சை முறைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் பயிற்றப்பட்டுள்ளார்கள். இன்னும் ஆம்புலன்ஸ் வண்டி மூலமாக இதய வலியுடன் வரும் நோயாளர்கள் மருத்துவமனைகளில் விரைவாகக் கவனிக்கப்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. மேலும் அவசர மருத்துவ சேவையினர் தாங்கள் கொண்டு வருகின்ற நோயாளி பற்றிய முக்கிய தகவல்களை மருத்துவமனைக்கு முன்கூட்டியே தெரியப்படுத்துவதால் நோயாளி மருத்துவமனையை வந்தடைகின்ற போது அந்நோயாளிக்குரிய சிகிச்சைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தக்கூடிய தயார் நிலையில் மருத்துவர்களும் தாதிமாரும் இருப்பார்கள். ஏதாவதொரு காரணத்தால் அவசரகால மருத்துவசேவையை உங்களால் அழைக்க முடியாது போகுமிடத்து வேறு ஒருவரின் உதவியைப் பெற்று ஒரு வாகனத்தின் மூலம் உடனடியாக ஒரு மருத்துவமனையின் அவசர நோயாளர் பிரிவுக்கு விரையுங்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பமாக இருந்தாலொழிய நீங்களாக வாகனத்தைச் செலுத்திக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டாம். அது உங்களுக்கும் பிறருக்கும் ஆபத்தாக முடியலாம்.

எமது உடலிலுள்ள பல கோடிக்கணக்கான கலங்களுக்கு குருதி பாய்ச்சி ஆகாரமும் ஆதாரமும் அளித்து, கழிவகற்றி, உடலில் உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்ற இதயத்தின் இயக்கம் நின்றுபோகும் தருணத்தில் உடலின் உயிர்ப்பும் நின்று போகின்றது. எனவே இதயத்தை இழந்துவிடாமல் இருக்க இயன்றவரை முயலுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 1

சங்க காலமே தமிழ்மொழியின் பொற்காலம் என்பது அறிஞர்களது கருத்தாகும். தமிழ்மொழியின் பொற்காலம் மட்டுமல்ல தமிழரின் பொற்காலமும் சங்க காலந்தான்.

தமிழ் அரசர்கள் தமிழர்களை ஆண்டார்கள். தமிழ்மொழி வீட்டுமொழியாகவும் அரசமொழியாகவும் இருந்தது.

பிற்காலச் சோழர்காலமும் தமிழர்களது பொற்காலம் என்று கூறுவார்கள். முதலாவது இராசராச சோழன் அவன் மகன் முதலாவது இராசேந்திரன் காலத்தில் புலிக்கொடி பறந்த சோழர்களது கடற்படை வங்கக் கடலில் உலா வந்தன.

இருந்தும் சோழர்கள் வடமொழிக்கு வழங்கிய ஆதரவை தமிழ்மொழிக்கு வழங்கவில்லை. வேதப் பாடசாலைகளைக் கட்டி அவற்றின் இயக்கத்துக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தார்கள். தமிழ்மொழிக்கு ஒரு பள்ளியேனும் கட்டினார் இல்லை.

சோழர் காலம் தமிழக வரலாற்றில் இன்னொரு பொற்காலம் என வர்ணிக்கப்பட்டாலும் தமிழ்மொழியைப் பொறுத்தளவில் வழிபாட்டிற்கும் சடங்கிற்கும் தகாத மொழியெனத் தமிழ் தள்ளி வைக்கப்பட்டது.

இருந்தும் நாயன்மார்களது தேவாரங்களையும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங்களையும் இசையுடன் பாட ஓதுவார்களை கோவில்களில் இராசராசன் அமர்த்தினான். இராசராசன் காலத்திலேயே தில்லையம்பலத்தில் தில்லைவாழ் மூவாயிரம் பதிகங்கள் அடங்கிய ஏட்டுக் குவியலைக் கண்டெடுத்துப் புதுப்பித்தான்.

இந்திய மொழிகளுக்கு எல்லாம் வடமொழியே தாய்மொழி என்று ஒரு காலத்தில் வடமொழிவாணர்கள் சொன்னார்கள். பக்தி போதை தலைக்கேறிய தமிழர்களும் அதனை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்.

பன்மொழி வல்லுனர் முனைவர் கால்டுவெல் அய்யர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of Dravidian Languages) என்ற ஆய்வு நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிடும்வரை இந்தப் படிமம் தமிழ் படித்த புலவர்கள், பண்டிதர்கள் உட்பட எல்லார் மட்டத்திலும் இருந்தது.

தமிழ்மொழிப் பயன்பாடு பின்பட்டதால் அதன் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டது. கம்பர், சேக்கிழார் போன்ற பெரும் புலவர்கள் அதனைப் போக்க நினைத்தார்கள்.

இனிமையும் நீர்மையும் தமிழெனவாகும் என்கிறது பிங்கல நிகண்டு.

தமிழின் தொன்மை பற்றி அறுதியிட்டுச் சொல்ல முடியாது இருக்கிறது.

தொன்று நிகழ்ந்த அனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தனள் என்று உணராத இயல்பினளாம் என பாட்டுக்கொரு புலவன் பாரதி தமிழ் பிறந்த நாள் தெரியாது கழிவிரக்கப்பட்டான்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே எனப் பாரதி வெறுமனே சொல்லவில்லை. வடமொழி, ஆங்கிலம், இந்தி, பிரஞ்சு ஆகிய மொழிகளைப் படித்துவிட்டே அப்படியொரு தீர்ப்பைச் சொன்னான்.

மறைமலை அடிகள், பரிதிமாக்கலைஞர், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்ற தமிழ் அறிஞர்களின் முயற்சியால் தனித் தமிழ் இயக்கம் தலைதூக்கியது. அதன் காரணமாக தமிழ்மொழியின் இனிமையும் நீர்மையும் மீட்கப்பட்டன.

தமிழ்மொழியில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருக்கின்றன. இது அதன் வளமைக்கு எடுத்துக்காட்டு.

தமிழில் பெரும்பாலும் வினையடியில் இருந்தே பெயர்ச் சொற்கள் பிறக்கின்றன. இதனை ஒரு சிறு எடுத்துக்காட்டு மூலம் எண்பிக்கலாம்.

ஆங்கிலத்தில் பூவுக்கு flower, bud என்ற இரு சொற்களே இருக்கின்றன. வாடிய மலரை stale flower என அழைப்பார்கள். வடமொழியில் புஷ்ப்பம் என்ற ஒரே சொல்தான் இருக்கிறது.

ஆனால் தமிழில் பின்வரும் சொற்கள் ஒரு பூவின் பருவத்தையும் உருவத்தையும் காட்டி நிற்கின்றன.

அரும்பு - அரும்பும் நிலை
மொட்டு - மொக்குவிடும் நிலை
முகை - முகிழ்க்கும் நிலை
போது - மலரும் நிலை
மலர் - மலர்ந்த நிலை
அலர் - நன்றாக மலர்ந்த நிலை
வீ - வாடும் நிலை
செம்மல் - வதங்கும் நிலை

இதேபோல் ஒரு பெண்ணின் பருவத்தையும் உருவத்தையும் காட்ட -
பேதை - 5 அகவைக்குக் கீழ்
பெதும்பை - 12 அகவைக்குக் கீழ்
மங்கை - 16 அகவைக்குக் கீழ்
மடந்தை - 25 அகவைக்குக் கீழ்
அரிவை - 30 அகவைக்குக் கீழ்
தெரிவை - 35 அகவைக்குக் கீழ்
பேரிளம் பெண் - 45 அகவைக்குக் கீழ்

எனப் பகுத்துள்ளார். பிற்காலத்தில் தமிழ்மொழி ஆட்சி ஆண்மை இழந்தபோது அதன் வளர்ச்சி தடைப்பட்டது. தமிழ்மொழி சூத்திர பாஷை, நீச பாஷை எனப் புறந்தள்ளப்பட்டது. அதனைத் தமிழர்கள் சமயத்தின் பெயரால் ஏற்றுக் கொண்டார்கள். ஒதுக்கப்பட்ட தமிழில் கலைச் சொற்களின் உருவாக்கம் தடைப்பட்டது. தமிழ் தாழ்வுற்றது.

தொடர்ந்து தமிழின் சிறப்பைப் பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R&S Auto Sales

Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபவம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS



ON THE SPOT
FINANCING

4362 Sheppard Ave. East
at Brimley

Tel: 416 412 3838

# விமானப் பயண உரிமை மறுக்கப்பட்டோர் பட்டியல்

கனடாவில் இந்த மாதம் (ஜுன்) தொடக்கம், உள்ளூர் மற்றும் வெளியூர் விமானங்களில் பயணம் செய்ய தடை செய்யப்பட்டோர் பட்டியல் நடைமுறைக்கு வரவுள்ளது.

அமெரிக்காவில் 9/11 பயங்கரவாத நடவடிக்கை இடம்பெற்று கிட்டத்தட்ட 6 வருடங்களின் பின், தேசிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் வணிக விமானங்கள், பயணிகள், விமான உத்தியோகத்தர்களுக்கு அபாயமேற்படலாம் எனக் கருதப்படுவோரின் 'சந்தேகத்திற்கிடமானோர்' கறுப்புப் பெயர்ப் பட்டியல் தயார் படுத்தப்பட்டுள்ளது.

விதிகளுக்கமைய, 'பயணிகள் பாதுகாப்பு' திட்டம் எனும் நிரலின் கீழ், பயணியின் பெயர் விமான நிலையத்தில் அரசாங்கத்தின் பட்டியலுடன் பரிசீலிக்கப்படும்.

கனடிய போக்குவரத்து நிர்வாகத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த பெயர்ப் பட்டியல் RCMP, CSIS அதிகாரிகளின் தகவல்களையும் உள்ளடக்கும்.

ஒருவரின் பெயர் பட்டியலுடன் பொருந்தினால், அப்பயணி பயண முகவரிடம் ஒப்படைக்கப்படுவார். அவர், கனடிய போக்குவரத்து அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பயணியை மேற்கொண்டு பயணஞ் செய்ய அனுமதிப்பதா என்ற முடிவினை பெறுவார்.

பயணம் மறுக்கப்பட்டவர்கள் தமது பெயர்கள் பட்டியலில் இடம்பெற்றதையிட்டு தமது எதிர்ப்பினை தெரிவிக்கலாம். ஆனால் சுருக்கமாகக் கூறின், அவர்கள் தோற்கடிக்கப்படுவர். அத்துடன் விமான நிலைய அதிகாரிகள் அல்லது உளளூர் பொலிசாருக்கும் தெரியப்படுத்தப்படும்.

---

# கடும் கண்காணிப்பை எதிர்நோக்கும் வங்கிகளின் தானியங்கி இயந்திரங்கள்

தானியங்கி வங்கி இயந்திரங்களில் மக்கள் பணம் பெறும் பொழுதெல்லாம் அதற்காக ஒரு கட்டணத்தை அறவிடுகின்றன வங்கிகள். குறிப்பாக தம் பணம் வைப்பிலிருக்கும் குறித்த வங்கி இயந்திரத்திலல்லாமல் பிறிதொரு வங்கியின் இயந்திரத்தில் பணத்தை எடுக்கும் பொழுது அதற்கான கட்டணமாக 1.50 டாலரிலிருந்து 2.50 டாலர் வரை வங்கிகள் அறவிடுகின்றன. இதன்மூலம் கடந்த வருடத்தில் 420 மில்லியன் டாலர்களை வருமானமாக ஈட்டியிருக்கின்றன என என்டிபி கட்சியின் தலைவர் ஜக் லேயிற்றன் தெரிவித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக வங்கி அதிகாரிகளுடன் நிதி மந்திரி ஜிம் பிஃளாகெற்றி கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியுள்ளார். இதன் பின்னணியில் வங்கி இயந்திரங்களின் கட்டணங்கள் கடும் கண்காணிப்பிற்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"புதிய இயந்திரங்களுக்கும், இயந்திரங்களை பராமரித்து பேணுவதற்கும், தற்போதைய தொழில்நுட்பங்களை கொண்டவையாகவும், பாவனையாளரின் விருப்பத்திற்கிணங்கவும் சேவைகளை வழங்குவதற்கு இந்த கட்டணங்கள் அறவிடுதல் அவசியமானது" என வங்கிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

Bank of Montreal வங்கி ஒரு வருடம் முழுவதுமான இயந்திரங்களை தரம் உயர்த்தும் பணியை 200 புதிய இயந்திரங்கள் பொருத்துதல் அடங்கலாக கடந்த மார்கழி மாதத்தில் முடித்துள்ளது. CIBC வங்கி 125 மில்லியன் டாலர்களை கடந்த வருடத்தில் தமது இயந்திரங்களை தரமுயர்த்துவதில் செலவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மறுபக்கத்தில், இந்தக் கட்டணங்கள் பல வருடங்களாக ஒரு நியாயமற்ற முறையில் அதிகரித்து வந்துள்ளன என விமர்சனங்கள் தெரிவிக்கின்றன.

கனடியன் வங்கி கூட்டமைப்பின் 2004ம் ஆண்டிற்கான ஆய்வின்படி, 34 வீதமான மக்கள் இந்த இயந்திரங்களையே வங்கியிலிருந்து பணம் எடுக்க முக்கிய வழியாகப் பாவிக்கின்றனர் என தெரிகின்றது. 2005ம் ஆண்டின் விபரப்படி உலகத்திலேயே மக்களின் விகிதத்திற்கேற்ப மிக அதிகமான அதாவது 16,000 வங்கி இயந்திரங்கள் கொண்ட நாடாக கனடா உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இருவர் - நமக்கு மூவர்

## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

### புலம்பெயர்ந்தவர்களுக்கான தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் குழந்தை பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்குள் மூன்று குழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்குவிப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

தமிழ்க் குழந்தைகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்கு முன்னர் எப்போது மூன்று குழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு குழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமாகும் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்கும் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்குக்கூட மூன்று-நான்கு வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். குழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.


**P. Kayilasanathan**

B.A. (Cey) LLB (Cey)

**BARRISTER & SOLICITOR**



குற்றவியல் வழக்குகள்,
அகதிநிலை விசாரணைகள்,
மனிதாபிமான விண்ணப்பங்கள்,
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் - விற்றல்,
குடும்ப வழக்குகள்,
வாகன விபத்து நஷ்டஈடு கோருதல்.

**பொ. கயிலாசநாதன்**

கனடிய பரிஸ்டர்

2401 Eglinton Av. E. Suite #302
(Eglinton / Kennedy)
Scarborough ON M1R 2M5

**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







தொடர்புகளுக்கு:

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்

ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**

**Mississauga, ON. L5S 1L6**

**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NLR ACCOUNTING AND TAX SOLUTIONS

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
416 888 1128
416 492 7973

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

## பண்பாடு - வேரும் விழுதும் நூல் வெளியீட்டு விழா

திரு. சுப்பிரமணியம் இராஜரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'பண்பாடு - வேரும் விழுதும்' ஆய்வு நூல் வெளியீட்டு விழா இந்த மாதம் 24ம் திகதி கனடா கந்தசாமி கோவில் அலங்கார மண்டபத்தில் பிற்பகல் 5:30 மணி முதல் நடைபெறவுள்ளது. அனைவரும் விழாவுக்கு அழைக்கப்படுகின்றனர். கனடா தமிழ்க் கலை தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவராக திரு. இராஜரத்தினம் பணியாற்றிய வேளையில் இவரது முதல் நூலான 'தமிழீழம்- நாடும் அரசும்' வெளியாகி இரு பதிப்புகளைக் கண்டது.

## கலைஞர் திவ்யராஜனின் 'சகா' டிவிடி வெளியீடு

கலைஞர் வி. திவ்யராஜனின் தயாரிப்பான 'சகா' திரைப்படத்தின் டிவிடி வெளியீட்டு வைபவம் இந்த மாதம் 10ம் திகதி ஸ்காபரோ சிவிக் சென்டரில் பிற்பகல் நடைபெறவுள்ளது. கனடாவில் தயாரிக்கப்பெற்ற 'சகா' இங்குள்ள பல நகரங்களில் மட்டுமன்றி, இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களிலும் காண்பிக்கப்பெற்றது.

## கணேசதுர்க்கா ஆலய அம்பாள் உற்சவம்

மிசிசாகாவில் அமைந்துள்ள சிறீ கணேசதுர்க்கா ஆலயத்தில் அமைந்துள்ள அம்பாளுக்கான வருடாந்த உற்சவம் இந்த மாதம் 10ம் திகதி ஆரம்பமாகி, 15 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 23ம் திகதி சனிக்கிழமை காலை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென ஆலய பிரதம குருக்கள் சிவசிறீ ப. கிருஷ்ணராஜ குருக்கள் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களுக்கு: 905 405 0011 அல்லது 905 501 0011



"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
Direct: 416-284-5555
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED


Graphic Land - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**
Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்-கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு
வழக்கறிஞர்
இல்லை

*Motor Vehicle Accident*
*Criminal*
வாகன விபத்து!
கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..
உரிய



சட்ட
ஆலோசனைகளுக்கு
கலகலப்பு தீசன்
416-803-5296
WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager


416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca


# சதா கான நிலைய ஆண்டு இசைவிழா

மிஸிஸாகாவில் இயங்கிவரும் 'சதா கான நிலைய'த்தின் ஆண்டு இசை விழா அண்மையில் 'ஸ்குயார் வன் (Square One) ஓடிட்ரோறியத்தில்' சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் திருமதி பவானி ஆலாலசுந்தரம், திருமதி அகிலா கிரிகரன் ஆகியோரின் மாணவர்கள் இசைவிருந்தளித்தனர். விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இசைத்துறையில் சேவைபுரிந்து வரும் சங்கீத பூஷணம் வேலாயுதர் கனகசுந்தரம் அவர்களுக்கு சிறப்பு கௌரவம் செய்யப்பட்டது. இவர் 1946ம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவந்து இராமநாதன் இசைக்கல்லூரியில் வீணை விரிவுரையாளராகவும் பின்னர் இலங்கை வானொலியில் வாத்திய இசை அமைப்புக்கு பொறுப்பாகவும் இருந்தவர். இராமநாதன் கல்லூரியில் திருமதி பவானி ஆலாலசுந்தரம் இவரிடத்தில் சங்கீதம் கற்றிருந்தார். இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக டாக்டர் எஸ். யோகேந்திரன் (அண்மையில் மறைந்த) கலந்து சிறப்பித்தார்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

DR. ILLANGO & ASSOCIATES

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S.F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR

D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO

B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**





**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்


**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

## NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org